ISSN: 2582–5518




புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ டிசம்பர். 15, 2023 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 71 ❖ ரூ.10

### பாஜக அரசின் 'தோல்வி'யை மறைக்கவே எம்.பி.க்கள் மீது இடைநீக்க நடவடிக்கை

# குற்றச்சாட்டு

## பாதுகாப்பு அத்துமீறல் தொடர்பாக உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவை மற்றும் மாநிலங்களவையில் விளக்கம் அளிக்க வேண்டும்; இண்டியா' கூட்டணி

புதுடெல்லி , டிச. 15–

**"எதிர்க்கட்சிகளை இந்த அரசு பயமுறுத்த நினைக்கிறது. தனது தோல்வியை மறைக்கவே கேள்வி கேட்ட எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்" என்றுமக்களவை அத்துமீறல் விவகாரத்தில் பாஜக அரசு மீது எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.**






நாடாளுமன்ற மக்களவையில் புதன்கிழமை நிகழ்ந்த பாதுகாப்பு அத்துமீறல் தொடர்பாக உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவை மற்றும் மாநிலங்களவையில் விளக்கம்அளிக்கவேண்டும் என்று 'இண்டியா' கூட்டணி கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில், நேற்று காலையில் அவை கூடியதும் இதனை வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோஷங்களை எழுப்பினர். இதனால், அவையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. உறுப்பினர்களை சமாதானப்படுத்த சபாநாயகர் மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்தை அடுத்து, அவை பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியதும், புதன்கிழமை நடந்தபாதுகாப்புஅத்துமீறல் குறித்து நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அறிக்கைவாசித்தார். அவர், "நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவம் மிகவும் துரதிருஷ்டவசமானது. உறுப்பினர்களின் பாதுகாப்புசம்பந்தப்பட்டது. எனவே, இது குறித்து அரசு கவலை கொள்கிறது. சம்பவம் நடந்த உடன் அவைத் தலைவர்களின் ஆலோசனைக்கூட்டத்தை சபாநாயகர் நடத்தினார். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு பரிந்துரைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் சில பரிந்துரைகள் ஏற்கெனவே அமலில் இருக்கின்றன. நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மக்களவையின் பாதுகாப்பு, சபாநாயகரின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது.சம்பவம்நடந்ததும் உள்துறை செயலாளர் தலைமையில் உயர்மட்ட விசாரணைநடத்தசபாநாயகர் உத்தரவிட்டுள்ளார். விசாரணை தொடங்கிவிட்டது. எனவே, இந்த விவகாரத்தில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்றார். அவர் தனது உரையை வாசித்துக் கொண்டிருக்கும்போது, உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்கக் கோரி கோஷங்களை எழுப்பி எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். சிலர்பதாகைகளைக்காட்டி வலியுறுத்தினர். இதன் தொடர்ச்சியாக, அவை நடவடிக்கைக்கு எதிராக தீவிரமாகசெயல்பட்டதாக கனிமொழி, ஜோதிமணி உள்பட 13 எம்.பி.க்கள் எஞ்சிய குளிர்காலக் கூட்டத்தொடர் முழுவதும் இடைநீக்கம் செய்யப்பட்டார்கள்.




திமுக எம்.பி **கனிமொழி கூறுகையில்:** "மக்களவையில் அத்துமீறல் நடவடிக்கையில் ஈடுபட்ட நபர்கள் உள்ளே வருவதற்கு பாஸ் வழங்கிய எம்.பி. இன்னும் அவைக்குள் இருக்கிறார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், மஹுவா விவகாரத்தில் என்ன நடந்தது என்று நாம் எல்லோரும் பார்த்தோம். விசாரணை முழுமையாக முடியாத நிலையில், அவர் பதவி பறிக்கப்பட்டது. ஆனால், இந்த எம்.பி.யோ இடைநீக்கம் கூட செய்யப்படவில்லை.அவர் எங்களுடன் அவைக்குள் அமர்ந்திருக்கிறார். பிரதமரோ, உள்துறை அமைச்சரோ அவைக்கு வந்து நடந்த சம்பவங்கள் குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். அதனை ஏற்று நிறைவேற்ற இந்த அரசு தயாராக இல்லை. அதனை வலியுறுத்தி நாங்கள் முழக்கங்கள் எழுப்பியதும் அவர்கள் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவரையும் இடைநீக்கம்செய்கிறார்கள் முதலில் 5, அடுத்து 9 பேர் இடைநீக்கம்செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுதான் ஜனநாயகமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## பெருமழை பாதிப்புகளை சீர்செய்திட தற்காலிக நிவாரண நிதியாக ரூ.7033 கோடி வழங்க மத்திய அரசுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, டிச. 15–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட மத்திய குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.



அவ்வமயம், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிதி ஒதுக்கீடு கோரும் கோரிக்கை மனுவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசின் ஆய்வுக் குழுவின் தலைவைரிடம் வழங்கினார். இக்கோரிக்கை மனுவில், புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீர்செய்திடவும், மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், பழுதடைந்த துணை மின் நிலையங்கள் உள்ளிட்ட மின்சார உட்கட்டமைப்புகளை சீர் செய்திடவும், பாதிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் தொட்டிகள், தெருவிளக்குகள், கிராம சாலைகள் ஆகியவற்றைசீர் செய்திடவும் இழப்பீடுகள் கோரப்பட்டுள்ளது.

மேலும், மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், வலைகள் ஆகியவற்றிற்கு இழப்பீடுகள் வழங்கவும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை ஈடுசெய்திடவும், சாலையோரவியாபாரிகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடவும், தற்காலிக நிவாரணத் தொகையாக 7033கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வெள்ள சேதங்களைப் பார்வையிட்டு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் கடந்த இரண்டு நாட்கள் நீங்கள் மேற்கொண்ட ஆய்வு பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த வெள்ளச் சேதத்தை பொறுத்தவரை தமிழ்நாடு அரசு தேவையான எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது. அதேபோல் புயல், மழையின் தாக்கத்திற்கு பிறகு, மீட்பு நிவாரண நடவடிக்கைகளும் முழுவீச்சில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் இதனை குறிப்பிட்டு நீங்கள் தமிழக அரசிற்குபாராட்டுக்களை தெரிவித்திருந்தீர்கள், அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத இந்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களை சரிசெய்து மீண்டும் உருவாக்கிடவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அதனை மீண்டும் உருவாக்கி வழங்கிடவும் தமிழ்நாடு அரசின் நிதி ஆதாரங்கள் மட்டும் போதுமானது அல்ல. மத்திய அரசின் பங்களிப்பும் இதற்கு பெருமளவு தேவைப்படுகிறது.

எனவே, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை மீட்க தேவையான உதவிகளை வழங்கவும் பல்வேறு வகையான சமூக உட்கட்டமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்யவும் மத்திய அரசிற்கு நீங்கள் உரிய பரிந்துரை செய்து, தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரணத் தொகையை பெற்றுத்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் மத்திய குழுவினரை கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

## "சிதம்பரம் நடராஜர் கோயில் புதிய கட்டுமானங்களில் விதிமீறல்" ஆய்வு செய்த அதிகாரிகள் தகவல்

கடலூர், டிச. 15–

சிதம்பரம் நடராஜர் கோயிலில் அனுமதி பெறாமல் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதாக கூறப்பட்டது குறித்து இந்து அறநிலையத் துறை அதிகாரிகள், தொல்லியல் துறையினர் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.



உலகப் பிரசித்தி பெற்ற சிதம்பரம் நடராஜர் கோயிலில் பிரதான சின்னங்களை அகற்றிவிட்டு புதிய கட்டுமான பணிகள் நடைபெறுவதாக பக்தர் எம்.என்.ராதா மற்றும் இந்து சமய அநிலையத் துறை சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கை விசாரித்தநீதிபதிகள்மகாதேவன் மற்றும் ஆதிகேசவலு தலைமையிலான அமர்வு, இந்து சமய அறநிலைத் துறையை விசாரித்து அறிக்கை சமர்பிக்க உத்தவிட்டனர். இதனைத் தொடர்ந்து, இந்து அறநிலையத் துறை இது குறித்து குழு அமைத்து ஆய்வு செய்ய உத்தரவிட்டது.

இந்த நிலையில், நேற்று காலை சிதம்பரம் நடராஜர் கோயிலில் இந்து சமய அறநிலைத் துறை கூடுதல் ஆணையர் சங்கர் தலைமையில் கடலூர் மாவட்ட இந்து அறநிலையத் துறை இணை ஆணையர் பரணிதரன், திருவண்ணாமலை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் ஜோதி, தொல்லியல் துறை இணை ஆணையர் சிவானந்தம், ஆலோசகர் மணி உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழுவினர் வந்தனர்.

முன்னதாக, ஆய்வு குறித்து இந்து சமய அறநிலையத் துறை சார்பாக சிதம்பரம் நடராஜர் கோயில் தீட்சிதர்களிடம் கடிதம் அளிக்கப்பட்டது. அதனைப் பெற்றுக் கொண்ட தீட்சிதர்கள் ஆய்வு குறித்து தங்களிடம் முன்கூட்டியே எதுவும் தெரிவிக்கவில்லை எனவும், தங்கள் நிர்வாகத்தின் செயலர் ஊரில் இல்லாததாலும், தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கோயில் வழக்கறிஞர் சந்திரசேகரின் பதில் கடிதம் அளித்தனர்.

அதனைப் பெற்றுக்கொண்ட இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் குழுவினர் கோயில் வளாகத்தில் புதிதாக கட்டப்பட்ட கோசாலை, யானை தங்குமிடம், நந்தி மண்டபம் மற்றும் 4 கோபுரங்கள், அம்மன்கோயில், நடராஜர் கோயிலின் உள் பிரகாரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஆய்வு செய்தனர். மதியம் 2 மணிக்கு அதிகாரிகள் ஆய்வை நிறைவு செய்தனர். இதனிடைடையே, ஆய்வு குறித்து இந்து சமய அறநிலைத் துறை கூடுதல் ஆணையர் சங்கர் கூறுகையில், "கோயில் புதிய கட்டுமானங்களில் விதிமீறல்கள் உள்ளன" என்றார்.

## விஜயகாந்த் உடல்நிலை தளர்ந்த நிலையில், தேமுதிக கட்சியின் பொதுச் செயலாளராக பிரேமலதா நியமனம்

சென்னை, டிச. 15–

தேமுதிக பொதுக்குழு மற்றும்செயற்குழுகூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில் அக்கட்சியின் பொதுச் செயலாளராக பிரேமலதா விஜயகாந்தை தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



தேமுதிவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவேற்காடு ஜிபிஎன் பேலஸ் திருமண மண்டபத்தில் நேற்று காலை தொடங்கியது. உடல்நலப் பாதிப்பின் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள விஜயகாந்த் கூட்டத்தில் பங்கேற்றார். மிகவும் உடல் தளர்ந்த நிலையில், சக்கர நாற்காலியில் கூட்டத்திற்கு விஜயகாந்த் அழைத்து வரப்பட்டார். பொதுக்குழுக் கூட்டத்துக்கு வருகை தந்த விஜயகாந்துக்கு கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் ஆரவாரமாக கூச்சலிட்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த கூட்டத்தில் கட்சியின் பொருளாளர் பிரேமலதா, துணை செயலாளர் பார்த்தசாரதி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் தேமுதிக பொதுச் செயலாளராக பிரேமலதா விஜயகாந்த் நியமனம் செய்யப்பட்டு ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேமுதிக தொண்டர்கள் ஒற்றுமையுடனும் முழு வேகத்துடனும் பணியாற்றிட பொதுக்குழுவில்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்ற தேர்தல் கூட்டணியை முடிவு செய்ய விஜயகாந்துக்கே முழு அதிகாரம் எனவும் பொதுக்குழுவில்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த கூட்டத்தில் மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தேமுதிகவின் பொதுச் செயலாளராக அறிவிக்கப்பட்டதும், பிரேமலதா விஜயகாந்த் காலில்விழுந்து ஆசிபெற்ற பின் உரை நிகழ்த்தினார். அவருக்கு கட்சி நிர்வாகிகள் மலர்மாலை அணிவித்தனர். 2019 நாடாளுமன்ற தேர்தல் முதல் கடந்த 4 ஆண்டுகாலமாக எந்த கூட்டத்தில் விஜயகாந்த் பேசவில்லை. உடல்நலக்குறைவால் விஜயகாந்த் பொதுக் கூட்டங்களில் பேச முடியாத நிலையில் உள்ளார்.

## மிக்ஜாம் புயல் நிவாரணம் பெற நியாய விலை கடைகளில் நேற்று முதல் டோக்கன் விநியோகம் : 17ம் தேதி முதல் ரூ.6,000 வழங்க திட்டம்

சென்னை : டிச. 15–

புயல் நிவாரணத் தொகைக்கான டோக்கன்கள் சென்னையில் நேற்று பிற்பகல் முதல் விநியோகம் செய்யப்படுகிறது.



தமிழ்நாட்டில் கடந்த 3 மற்றும் 4ம் தேதி 'மிக்ஜாம்' புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் அதிகனமழை பெய்தது. மேலும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில வட்டங்களில் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. மிக்ஜாம் புயல் வெள்ளம் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித்தொகையாக ரூ.6 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது தொடர்பான அரசாணையும் வெளியிடப்பட்டது. அந்த அரசாணையில், மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் யாருக்கெல்லாம் தமிழக அரசு அறிவித்த நிவாரண உதவியான ரூ.6 ஆயிரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நிவாரணத் தொகை பெறுவதற்கான டோக்கன்கள் சென்னையில் நியாயவிலைக் கடைகள் மூலம் நேற்று முதல் விநியோகம் செய்யப்படுகிறது. நிவாரணம் வழங்குவது குறித்து ரேஷன் கடை பணியாளர்களுக்கு நேற்று காலை பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்கு பிறகு நேற்று பிற்பகல் முதல் டோக்கன் விநியோகம் செய்யும் பணியில் நியாயவிலை கடை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து ஞாயிற்றுக்கிழமை முதல் பயனாளர்களுக்கு ரூ.6,000 நிவாரணத் தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனிடையே வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு நிவாரண விண்ணப்பம் ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்படும் என்றும், விண்ணப்பத்தில் வங்கி எண், இடம் பூர்த்தி செய்துகொடுத்தால் அதிகாரிகள் ஆய்வுக்கு பின் நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் இந்த அறிவிப்பால் சென்னையில் வசிக்கும் மற்ற மாவட்டங்களை சேர்ந்தவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









## மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் இரண்டு நாள் சர்வதேச தொழில்நுட்ப மாநாடு



மதுரை, டிச.15–

மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் "ஆற்றல் பருப்பொருள் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல்" என்ற தலைப்பில் இரண்டு நாள் சர்வதேச தொழில்நுட்ப மாநாடு நடைபெறுகிறது

லண்டன், ஜெர்மனி உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து பொறியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் காணொளி காட்சி மூலம் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்

மதுரை திருப்பரங்குன்றம் அருகே உள்ள தியாகராஜா பொறியியல் கல்லூரியில் இரண்டு நாள் சர்வதேச தொழில்நுட்ப மாநாடு நடைபெறுகிறது.

சர்வதேச அமைப்பான இன்ஸ்டிடியூட் ஆப் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் உடன் இணைந்து தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புத்துறை மற்றும் இயற்பியல் துறை ஆகிய இணைந்து ஆற்றல் பருப்பொருள் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல்" என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு இரண்டு நாள் நடைபெறுகிறது.

தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் கலையரங்கத்தில் நடைபெற்ற விழாவில் இந்திய மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை சென்னை பிரிவுத் தலைவர் கொக்குமரன் தொடக்க உரையாற்றினார் இந்திய தொழில் நுட்பக் கழகத்தின் மின்னணு பொறியியல் துறை பேராசிரியர் பாலாஜி சீனிவாசன் சிறப்புரையாற்றினார், இந்த மாநாட்டின் கருப்பொருளானது எதிர்கால தொழில்நுட்ப பாதையை வடிவமைக்கும் முக்கியத்தூண்கள் என குறிப்பிட்டார், விழாவில் கல்லூரி முதல்வர் எம் பழனி நகராஜா தலைமை வைத்தார், மாநாட்டின் ஏற்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைப்பாளர்கள் வெங்கடேஷ், சார்லஸ் ராஜா, ஆனந்தி ஆகியோர் செய்து இருந்தனர்.

2023 சர்வதேச மாநாட்டின் நோக்கம் ஆராய்ச்சி மாணவர்கள் பொறியாளர்கள் பேராசிரியர்கள் உள்ளடக்கி இந்த மாநாட்டின் கருப்பொருள் பற்றிய சமீபத்திய முன்னேற்பாடுகளை குறித்து ஆராய்தல் மாநாட்டை நேரடியாகவும் இணையதள வழியாகவும் சுமார் 150 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு பேராசிரியருடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

## ஆத்தங்கரைப் பட்டி இல்லம் தேடிக் கல்வி மையத்தில் தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் குறித்து ஓவிய போட்டி நடைபெற்றது



கந்தர்வகோட்டை, டிச.15–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஆத்தங்கரைப் பட்டி இல்லம் தேடிக் கல்வி மையத்தில் தேசிய எரிசக்தி தினத்தை முன்னிட்டு ஓவியப்போட்டு நடைபெற்றது, ஓவிய போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது இந்நிகழ்வினை தன்னார்வலர் சண்முகபிரயா அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கந்தர்வகோட்டை ஒன்றிய இல்லம் தேடிக் கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா தேசிய எரிசக்தி தினம் குறித்து பேசினார்.

தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 14 அன்று கொண்டாடப்படுகிறது. ஆற்றல் சேமிப்பு மற்றும் செயல்திறனில் நாடு எவ்வாறு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை விளக்கும் வகையில், நாட்டில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது. நிகழ்காலம் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு எரிசக்தி சேமிப்பின் முக்கியத்துவம் குறித்தும், புவிவெப்பமடைதல், காலநிலை மாற்றம் மற்றும் எரிசக்தி வளங்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை ஊக்குவிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆற்றல் செயல்திறனை அதிகரிக்க, ஆற்றலை நியாயமான முறையில் பயன்படுத்த வேண்டியது அவசியம். எதிர்கால சந்ததியினருக்காக எரிசக்தி சேமிக்கப்படுவதை உறுதிசெய்ய, அதை திறமையாகப் பயன்படுத்துவது அவசியம். 1991 முதல், தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் டிசம்பர் 14 அன்று கொண்டாடப்படுகிறது. என்று பேசினார், மேலும் மாணவர்களுடைய வாசிப்பு திறன் குறித்து பார்வையிடப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டது.






## பால் விற்பனை விலையை ஆவின் பால் நிறுவனமும், தமிழக அரசும் உயர்த்தக் கூடாது

### ஜி.கே.வாசன் கோரிக்கை



சென்னை : டிச. 15, பால் கொள்முதல் விலை உயர்த்தியதால், பால் விற்பனை விலையை ஆவின் பால் நிறுவனமும், தமிழக அரசும் உயர்த்தக் கூடாது என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; ஆவின் பால் நிறுவனம் பால் உற்பத்தியாளர்களின் வேண்டுக்கோளுக்கு இணங்க பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 உயர்த்தி இருக்கிறது. இதனால் 4 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறுவார்கள். கால்நடைக்கான இடுப்பொருட்கள் விலை உயர்வு மற்றும் உற்பத்தி செலவினம் அதிகரித்ததால் பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கிட வேண்டும் என்று நீண்டநாட்களாக கோரிக்கை வைத்தார்கள்.

தற்பொழுது ஆவின் பால் நிறுவனம் பால் கொள்முதல் விலையை உயர்த்தி அறிவித்துள்ளது. ஆவின் பால் நிறுவனமும், தமிழக அரசும், பால் கொள்முதல் விலையை உயர்த்தி அளித்துவிட்டு, அதனை ஈடுக்கட்ட ஆவின் பால் விற்பனை விலையை உயர்த்தக் கூடாது. ஏற்கனவே ஆவின் பால் நிறுவனம் பால் பொருட்களின் விலையை உயர்த்தியுள்ளது. ஆகவே பால் விற்பனை விலையை மீண்டும் உயர்த்தினால் பால் நுகர்வோர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆவின் பால் நிறுவனம் தமிழக அரசின் நிறுவனம், அவை என்றும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாகவே இருக்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களையும், பால் நுகர்வோர்களையும் பாதுகாப்பதாகவே அவற்றின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

ஆவின் நிறுவனம் மற்ற மாநிலங்களில் இருந்து பால் கொள்முதல் செய்வதை கைவிட்டு, நமது மாநில பால் உற்பத்தியாளர்களிடமே பால் கொள்முதல் செய்ய வேண்டும். இதனால் பால் உற்பத்தியாளர்களுக்கும் பயன் கிடைக்கும், ஆவின் நிறுவனத்திற்கும் கொள்முதல் அளவும் உயர்ந்து, நுகர்வோரின் பால் தட்டுப்பாடும் விலகும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என்று ஜி.கே.வாசன் குறிப்பிட்டுள்ளார்.

## தென்காசி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் குறைதீர் கூட்டம்: மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி, டிச.15–

தென்காசி மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் குறை தீர் கூட்டம் உத்யம் பதிவு செய்தல் மற்றும் நிறுவனங்களில் ஆற்றல் சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் தென்காசி மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மாரியம்மாள் வரவேற்புரை ஆற்றினார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தென்காசி மாவட்டத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தெரிவித்த குறைகளை கேட்டறிந்தும் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தார். நிறுவனங்களில் ஆற்றல் சேமிப்பு குறித்து மதுரை கே எல் என் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மோகன்ராம், ரூபன் ராஜ், மற்றும் சுகவனேஷ் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, யூனியன் பாங்க் ஆப் இந்தியா, தென்காசி கிளை மேலாளர்கள் தென்காசி, செங்கோட்டை, புளியங்குடி, சங்கரன்கோவில், கடையநல்லூர், நகராட்சி ஆணையாளர்கள் தென்காசி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயபிரகாஷ், தென்காசி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கத் தலைவர் அன்பழகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஜெயங்கொண்டத்திலிருந்து திருச்சிக்கு இடைநில்லா பேருந்து போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்



அரியலூர், டிச.15–

ஜெயங்கொண்டத்திலிருந்து திருச்சிக்கு அரசு போக்குவரத்து கழகம் சார்பில், இடைநில்லா பேருந்தை, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி சிவசங்கர் தொடங்கி வைத்தல் உள்பட, பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இது பற்றி ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க சொ க கண்ணன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

ஜெயங்கொண்டம் அரசு போக்குவரத்து கழக கிளையில் ஓட்டுநர்கள், நடத்துனர்களுக்கு, புதிய குளிர்சாதன வசதிகளுடன் கூடிய ஓய்வறை திறப்புவிழா. அரசு போக்குவரத்து கழகத்தில், பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையை, 42 நபர்களுக்கு வழங்கும் விழா. ஜெயங்கொண்டம் அரசு போக்குவரத்து கழக கிளை சார்பில், ஜெயங்கொண்டம்–திருச்சி வழித்தடத்தில், இடைநில்லா பேருந்தினை இயக்கி வைக்கும் விழா, உள்ளிட்ட அரசு நிகழ்வுகள், அரியலூர் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ம.ச.கலைவாணி தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், குளிர்சாதன வசதிகளுடன் கூடிய ஓய்வறையை திறந்து வைத்தும், பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையை வழங்கியும், ஜெயங்கொண்டம்–திருச்சி வழித்தடத்தில், இடைநிலா பேருந்தினை கொடியசைத்தும் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அரசு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் ஆர்.மோகன், அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் சக்திவேல், அரியலூர் மண்டல மேலாளர் ராமநாதன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ச.பரிமளம், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் கலிலூர் ரகுமான், ஜெயங்கொண்டம் கிளை மேலாளர் ராம்குமார், மத்திய மண்டல தொமுச நிர்வாகிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், ஓட்டுநர்கள், நடத்துனர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடிக்கு பொறுப்பேற்று அமித்ஷா பதவி விலக வேண்டும் : திருமாவளவன் வலியுறுத்தல்



சென்னை : டிச. 15, நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடிக்கு பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; மக்களவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து அவைக்குள்ளே 10-12 அடி உயரத்திலிருந்து தாவி குதித்த இளைஞர்கள், 'தானா சாஹி நைச் சலேகா' என்று ஆவேசமாகக் கூச்சலிட்டனர். 'சர்வாதிகாரத்தை ஏற்க இயலாது' என்பதே அவர்களின் முழக்கம்.

அவர்கள் வீசியடித்தது கண்ணீர்ப்புகை அல்ல; ஏதோவெரு நெடி மிகுந்த வேதிப்பொருளின் புகை. அதனைப் பரவச் செய்யும் குப்பியைத் தமது காலணிகளில் மறைத்துக் கொண்டு வந்து அவையில் வீசியுள்ளனர். உடனே மஞ்சள் வண்ணப்புகை அவையெங்கும் பரவ, அங்கிருந்த உறுப்பினர்கள் அது நச்சுப்புகையோவென அஞ்சி பதறியடித்துக் கொண்டு வெளியேறினர். நாட்டையாளும் உயர் மன்றத்தில் உள்ளவர்களின் பாதுகாப்பே கேள்விக்குறியாகி உள்ளது. இதற்கு அமைச்சர் அமித்ஷா பொறுப்பேற்று பதவிவிலகுவதே அறஞ்சார்ந்த நேர்மைத் திறமாகும்.

மக்களவைக்குள்ளே வரும் அனுமதிக்காக அந்தப் பார்வையாளருக்குப் பரிந்துரைத்த பாஜக உறுப்பினரை உடனே பதவிநீக்கம் செய்ய வேண்டும். பாதுகாப்புச் சோதனைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரையும் உடனடியாக இடைநீக்கம் செய்ய வேண்டும் என்று திருமாவளவன் குறிப்பிட்டுள்ளார்.

## ஆவுடையார்கோவில் அருகே மீமிசல் பகுதியில் 3 விடுதலை சிறுத்தைகள் கட்சி கிளைகள் அமைக்கப்பட்டது



ஆவுடையார்கோவில், டிச.15–

விடுதலை சிறுத்தைகள் கட்சி தெற்கு மாவட்டம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், தெற்கு மாவட்டச் செயலாளர் இரா.தமிழ்ச்செல்வன். மீனவர் மேம்பாட்டு பேரவை மாவட்டச் செயலாளர் பீட்டர் வளவன். மாவட்ட தொண்டர் அணிச் செயலாளர் சரவணன், அய்யா உலகநாதன் இவர்களின் வலியுறுத்தலின் படி ஆவுடையார்கோவில் ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் தாழனூர் விஜயகாந்த் தலைமையில் மூன்று முகாம்கள் கட்டமைக்கப்பட்டது, வேல்வரை, இறையமங்கலம், பொன் பேத்தி ஆகிய பகுதிகளில் விடுதலைச் சிறுத்தையின் புதிய முகாம்கள் கட்டமைக்கப்பட்டது.

இதில் ஆவுடையார்கோவில் ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர்கள் காத்த முத்து, பாண்டி, பழனி, முத்து துறை, சந்திரன், விக்னேஸ்வரன், நிதர் ஆகிய மூன்று முகாம் செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு வெல்லும் ஜனநாயக மாநாடு எழுச்சித் தமிழர் வழியில் செல்வோம் என்று உறுதிமொழி எடுக்கப்பட்டது

## தகுதியுள்ள அனைவருக்கும் 6,000 ரூபாய் நிச்சயம் வழங்கப்படும் : முதல்வர் ஸ்டாலின் உறுதி



சென்னை : டிச. 15–

''எப்படி மகளிர் உரிமைத்தொகையை தகுதி உள்ள அனைவருக்கும் வழங்கி வருகிறோமோ, அதேபோல் மழையால் பாதிக்கப்பட்ட தகுதியுடைய அனைவருக்கும் நிவாரண நிதி ரூ.6,000 வழங்கப்படும்'' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை எழும்பூரில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் பி.கே.மூர்த்தியின் இல்லத் திருமண விழா நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு, மணமக்களை வாழ்த்தினார். இதையடுத்து இவ்விழாவில் அவர் பேசுகைல், ''மழை வருவதற்கு நான்கு நாட்களுக்கு முன் எச்சரிக்கை செய்தார்கள். ஆனால், இந்த அளவிற்கு மழை வரும், வெள்ளம் வரும், விடாமல் மழை பெய்யும் என எச்சரிக்கை விடவில்லை. அவையெல்லாம் மீறி 47 வருடத்தில் காணாத ஒரு மழையைப் பார்த்தோம்.

ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களுக்காக பாடுபடும் கட்சி திமுக. ஆட்சியில் இருந்த போதும் இப்படி பேரிடரைச் சந்தித்துள்ளோம். இல்லாத போதும் சந்தித்துள்ளோம். ஆட்சியில் நான் இல்லாதபோதும், பேரிடம் காலங்களில் எப்படி எல்லாம் நான் பாடுபட்டேன் என உங்களுக்கு தெரியும்.

2015-ல் வெள்ளம் வந்த போது முதலமைச்சராக ஜெயலலிதா இருந்தார். அப்போது செம்பரம்பாக்கம் ஏரி நிறைந்து விட்டதாக எச்சரிக்கைவிடப்பட்டது. அன்றைக்கு அதனை திறந்துவிட அவரிடம் அனுமதி கேட்க வேண்டும். ஆனால், அந்த அனுமதியைக் கேட்கபல அதிகாரிகள் பயந்தார்கள். அப்படிப்பட்ட நிலையால் தான் நூற்றுக்கணக்கான மக்களை நாம் இழந்தோம்.

ஆனால், இப்போது வரலாறு காணாத மழையால், செம்பரம்பாக்கம் ஏரி நீரை திட்டமிட்டு திறந்து பாதுகாப்பாக சென்னையை மீட்ட அரசு தான் திமுக அரசு. அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் என அத்தனை பேரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணை நின்றார்கள். அதனால் தான் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

2015-ல் அரசின் சார்பில் உதவி செய்கிறோம் என நிவாரணப்பொருட்களை பல ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அதைக்கூட அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா ஸ்டிக்கர் ஒட்டி அனுப்பி வைத்தார். ஆனால், திமுக அப்படி இல்லை. சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு என யார், எங்கு பாதிக்கப்பட்டிருந்தாலும் 6000 ரூபாய் நிவாரணம் உறுதியாக வழங்கப்படும். தகுதியுள்ள அனைவருக்கும் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் எனக்கூறி, அதனை செய்து வருகிறோமோ, அதேபோல இதையும் செய்து முடிப்போம்.

மழை வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்த மத்திய அரசு அதிகாரிகள், தமிழ்நாடு அரசு இந்த பாதிப்பை சாமர்த்தியமாக கையாண்டுள்ளது என மனதாரப் பாராட்டியுள்ளனர். திமுக ஆட்சி பொறுப்பில் இல்லாத போதும் சரி, இருக்கின்ற போதும் சரி மக்களின் எல்லா சூழ்நிலையிலும் உடனிருக்கும்" என்று தெரிவித்தார்.

# ஊத்துக்கோட்டை மின்வாரிய அலுவலகத்தில் மனு கொடுக்கும் போராட்டம்: அதிகாரி இல்லாததால் வாக்குவாதம்




ஊத்துக்கோட்டை, டிச15–

மின்சாரத்தை தனியாரிடம் ஒப்படைத்து ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கொண்டு வரும் மத்திய அரசை கண்டித்தும், இதற்கு துணை போகும் தமிழக அரசை கண்டித்தும், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்,வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் உள்ளிட்ட திட்டங்களை ரத்து செய்ய முயல்வதாக கூறி மனு கொடுக்கும் போராட்டம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நேற்று தமிழகம் முழுவதும் நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஊத்துக்கோட்டை வட்டக் குழு சார்பில் ஊத்துக்கோட்டை அண்ணா சிலை அருகே இருந்து ஊத்துக்கோட்டை உதவி செயற்பொறியாளர் அலுவலகம் வரையில் ஊர்வலமாக சென்றனர். பின்னர்,உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அருகே கண்டன உரையாற்றினர். இப்போராட்டத்துக்கு ஊத்துக்கோட்டை வட்ட குழு தலைவர் பி.விஸ்வநாதன் தலைமை தாங்கினார்.

இதில், மாவட்ட செயலாளர் ஜி.சம்பத், மாவட்டத் துணைத் தலைவர் பி.ரவி,மாவட்ட குழு உறுப்பினர்கள் கே.வாசுதேவன்,எம்.திருப்பதி, பி.முனுசாமி ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். இதன் பின்னர், உதவி செயற்பொறியாளரிடம் மனு வழங்க அலுவலகத்திற்குள் சென்றனர்.ஆனால்,மனுவை பெற்றுக்கொள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்துக்கு நீண்ட நேரமாக காத்திருந்தும் வரவில்லை.இதனால் மனு கொடுக்க அலுவலகத்துக்குள் வந்திருந்த தமிழ்நாடு விவசாய சங்க நிர்வாகிகள் காத்திருந்தனர்.மனுகொடுக்கும் போராட்டம் நடைபெறும் என தகவல் கூறியும் அதிகாரிகள் இல்லையே! என தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் அங்கிருந்த ஊழியர்களிடம் கேள்விஎழுப்பினர்.அப்பொழுது ஒரு ஊழியர் நீங்கள்! ஏதோ? வெளியில் நின்று கத்திக் கொண்டு இருக்கிறீர்கள் என்று நினைத்துக் கொண்டு உதவி செயற்பொறியாளர் வெளியே சென்று விட்டார். என கேலியும்,கிண்டலுமாக கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த தமிழ்நாடு விவசாய சங்க நிர்வாகிகள் அங்கிருந்த ஊழியர்களிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும், இதுபோன்று உதாசீனமான பேசினாள் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம்! என எச்சரித்தனர்.இதனால் பாதுகாப்புக்கு வந்திருந்த ஊத்துக்கோட்டை காவல் நிலைய போலீசார் மின்வாரிய அலுவலக ஊழியர்களையும்,தமிழ்நாடு விவசாயசங்கநிர்வாகிகளையும் சமாதானப்படுத்தினர்.இதன் பின்னர்,உதவி பொறியாளர் செந்தில்குமார் என்பவர் தன்னிடம் கோரிக்கை மனுவை வழங்குமாறு வந்து கூறினார்.இதன் பின்னர், அவரிடம் மனு கொடுக்கும் போராட்டத்தின் படி மனுவை வழங்கிவிட்டு அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர்.இப்பிரச்சனையால் சுமார் ஒரு மணி நேரம் மின்வாரிய அலுவலகத்தில் பதட்டமும்,பரபரப்பும் நிலவியது.



▶ காரைக்கால் மாவட்டம் திருப்பப்பட்டினம் கீழையூர் பகுதிக்கு உட்பட்ட பொய்யாதமூர்த்தி அய்யனார் கோவில் திடலில் காரைக்கால் தனியார் துறைமுகத்தின் சமூக பாதுகாப்பு நிதியின் கீழ் தென்னை, தேக்கு, மகாகனி, சந்தனம், வேங்கை, பூவரசு, மலைவேம்பு, இலுப்பை உள்ளிட்ட 1500 மரக்கன்றுகள் நடப்பட்டன. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும் கோவிலின் நலனுக்காகவும் மரக்கன்றுகள் நடப்பட்டன. மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை திருப்பட்டினம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் மரக்கன்றுகளை நட்டு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தனியார் துறைமுக பொறுப்பாளர்கள் பொய்யாத மூர்த்தி அய்யனார் கோயில் அறங்காவல் வாரியத்தின் தலைவர் ராஜேந்திரன் பொருளாளர் மாதவன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

காரைக்கால் மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட

# அனைவரையும் கவர்ந்த "நம்ம காரைக்கால்" வாசகம்




காரைக்கால், டிச,15

காரைக்கால் மாவட்டத்தின் எல்லைப்பகுதியான நண்டலறு பகுதியில் காரைக்கால் மாவட்ட எல்லை தொடங்கும் இடத்தில் புதிதாக "நம்ம காரைக்கால்" என்ற வாசகம் புதிதாக வைக்கப்பட்டுள்ளது. காரைக்கால் மாவட்டத்தில் நுழைவு வாயிலை குறிக்கும் வகையிலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள இந்த வாசகத்தில் நம்ம என்றவாசகம் தமிழிலும் காரைக்கால் என்ற வாசகம் ஆங்கிலத்திலும் காண்போரை கவரும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் வாகனங்களை நிறுத்திவிட்டு அந்த இடத்தில் செல்ஃபி எடுத்து மகிழ்கின்றனர். நம்ம காரைக்கால் என்ற வாசகம் தற்போது காரைக்காலில் முக்கிய செல்பி பாயிண்டாக மாறி உள்ளது. சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் "நம்ம காரைக்கால் " என்ற வாசகம் வைக்கப்பட்டது சுற்றுலா பயணிகள் மற்றும் காரைக்கால் மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

# மங்கைநல்லூரில் சிறப்பு மருத்துவ முகாம் எம்எல்ஏ நிவேதா முருகன் துவங்கி வைத்தார்




குத்தாலம், டிச– 15:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், மங்கைநல்லூர் ஊராட்சியில் உள்ள அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளியில் பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

குத்தாலம் வட்டார மருத்துவ அலுவலர் கோபி தலைமையில் நடைபெற்ற முகாமை பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயளாலருமான நிவேதா எம். முருகன் துவங்கி வைத்து பார்வையிட்டார். இந்த முகாமில் பொதுமருத்துவம், குழந்தைகள் பிரிவு, தோல் மருத்துவம், எலும்பு சிகிச்சை, கண் சிகிச்சை, யுனானி, ஆயுர்வேதம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இசிஜி, ரத்த நோய் கண்டறியும் ஆய்வகம், தடுப்பூசி செலுத்துதல் போன்ற முகாம்களில் 500–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருந்து பல்வேறு சோதனைகளை எடுத்துக் கொண்டனர். உடல் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் மேல் சிகிச்சை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து மருத்துவர்கள் பல்வேறு ஆலோசனைகளை பொதுமக்களுக்கு வழங்கினர்.

இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், திமுக மாவட்ட துணை செயலாளர் செல்வமணி ஒன்றிய செயலாளர்கள் மங்கை சங்கர், ராஜா, எம். அப்துல்மாலிக், அமுர்த. விஜயகுமார் மற்றும் திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# ஆக்கூர் தான்தோன்றீஸ்வரர் கோவிலில் அன்னம் பாலிப்பு நிகழ்ச்சி: கலெக்டர் பங்கேற்பு




தரங்கம்பாடி, டிச– 15:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா ஆக்கூரில் தேவாரப் பாடல் பெற்ற ஸ்ரீ வாள்நெடுங்கண்ணி சமேத தான்தோன்றீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இங்கு சிறப்புலி நாயனார் அவதரித்து, வாழ்ந்து, முக்தி அடைந்த தலமாக போற்றப்படுகிறது.

அதி தீவிர சிவபக்தராக திகழ்ந்த சிறப்புலி நாயனாரின் பெருமையை உலகுக்கு உணர்த்த விரும்பிய இறைவன் சிறப்புலி நாயனார் அளித்த அன்னம் பாதிப்பில் ஆயிரம் பேரில் ஒருவர் குறைவாக 999 பேர் உணவு அருந்த வந்தனர். அப்போது ஆயிரத்தில் ஒருவராக இறைவன் பந்தியில் உணவு அருந்தி நாயனாருக்கு காட்சியளித்தார். இதனை போற்றும் வகையில் ஆண்டுதோறும் கார்த்திகை மாத பூராட நட்சத்திரத்தில் அவதரித்த சிறப்புலி நாயனார் குரு பூஜையும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறுவது வழக்கம்.

இவ்வாண்டு கார்த்திகை மாத பூராட நட்சத்திரமான நேற்று ஆக்கூர் கோவிலில் சுவாமி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்புலி நாயனார் குரு பூஜையை முன்னிட்டு உற்சவரான ஆயிரத்தில் ஒருவர், சிறப்புலி நாயனார் சிவவாத்தியம் முழங்க கோவில் வளாகத்தில் சிறப்பு ஆராதனைகள் நடத்தப்பட்டு அன்னம் படையல் இட்டு ஆயிரம் பேருக்கு அன்னம் பாலிக்கும் கோவிலில் நடைபெற்றது.

சிறப்புலி நாயனார் குருபூஜை விழாவில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், அரசு வழக்கறிஞர் ராம.சேயோன், ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமோகன், இந்து சமய அறநிலைத்துறை திருக்கோயில் செயல் அலுவலர் உமேஷ்குமார், ஆய்வாளர் கண்ணன், பணியாளர் சதீஷ் மற்றும் திரளான சிவனடியார்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்ததுடன், சுவாமிக்கு நெய்வேத்தியம் செய்யப்பட்டு பந்தியில் பரிமாறப்பட்ட உணவு அருந்தினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்புலி நாயனார் வார வழிபாட்டு மன்றத்தினர் செய்திருந்தனர்.

# மங்களம் ஊராட்சியில் சின்மய கிராம மேம்பாட்டு அமைப்பு சார்பில் 52 குடும்பங்களுக்கு நிவாரண உதவி பொருட்களை வழங்கினர்



ஊத்துக்கோட்டை, டிச15–

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு,திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டனர்.இவ்வாறு பாதிப்புக்கு உள்ளான மக்களை தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள்மற்றும்சட்டமன்ற உறுப்பினர், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் சந்தித்து ஆறுதல் கூறினர்.

மேலும்,பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களால் இயன்ற நலத்திட்ட உதவிகளை செய்து வருகின்றனர். இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் ஊராட்சியில் கார்டு என்ற சின்மய கிராம மேம்பாட்டு அமைப்பு என்ற தொண்டு நிறுவனம் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், மங்களம் ஊராட்சியில் வசித்து வரும்50குடும்பங்களுக்குஅரிசி, மளிகை பொருட்கள் மற்றும் இரண்டு குடும்பங்களுக்கு தார்ப்பாய் என மொத்தம் 52 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சிக்கு,மங்களம் ஊராட்சிமன்ற தலைவர் நடராஜன்தலைமைதாங்கினார்.

இதில், சிறப்பு அழைப்பாளராக சின்மய கிராம மேம்பாட்டு அமைப்பின் இயக்குனர் பிரியாஅருணாசலம் கலந்து கொண்டு நிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிப்பொருட்களை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில், களப்பணியாளர்கள் பூர்ணிமா,ஜான்சி,வார்டு உறுப்பினர்கள் தீபா, முத்தம்மாள்,குமாரி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சென்னையின் எப்.சி. அணி 2–0 என்ற கோல் கணக்கில் பெங்களூரு அணியை வீழ்த்தி வெற்றி



சென்னை,டிச,15

சென்னை, 12 அணிகள் பங்கேற்றுள்ள 10–வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து தொடர் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. ஒவ்வொரு அணியும் உள்ளூர்– வெளியூர் அடிப்படையில் 2 முறை மோதும். லீக் சுற்று முடிவில் முதல் 6 இடங்களை பிடிக்கும் அணிகள் 'பிளே–ஆப்' சுற்றுக்கு தகுதி பெறும்.

இந்த தொடரில் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற லீக் ஆட்டத்தில் 2 முறை சாம்பியனான சென்னையின் எப்.சி. முன்னாள் சாம்பியனான பெங்களூரு எப்.சி.யை எதிர்கொண்டது.

இந்த போட்டியில் சென்னை அணி சார்பில் ரபேல் ஆட்டத்தின் 6–வது நிமிடத்திலும் ஜோர்டான் ஆட்டத்தின் 50–வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர்.

பெங்களூரு அணி ஆட்டம் முடியும் வரை திருப்பி எந்த கோலும் அடிக்கவில்லை. இதையடுத்து ஆட்டநேர முடிவில் சென்னையின் எப்.சி. அணி2–0என்றகோல்கணக்கில் பெங்களூரு அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்த வெற்றியை சென்னை ரசிகர்கள் கொண்டாடினர்.

# காஞ்சிபுரத்தில் பாஜக பிரமுகர் பிறந்தநாள் நலத்திட்டஉதவி வழங்கல்



காஞ்சிபுரம் டிச, 15–

காஞ்சிபுரம் பாரதிய ஜனதா கட்சியின் காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளரும், காஞ்சிபுரம் மாவட்ட துணை தலைவரும், விவசாய அணியின் காஞ்சிபுரம் மாவட்ட பார்வையாளருமான ஆ. செந்தில்குமார் பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. அவரின் 45 வது பிறந்த நாளை முன்னிட்டு செந்தில் பிரதர்ஸ் குழுமத்தை சேர்ந்த 45 இளைஞர்கள் உடல் உறுப்பு தானம், 45 இளைஞர்கள் கண் தானம் ஆகியவற்றை குறித்து சான்றிதழ் அரசு மருத்துவமனையில் அளித்தனர். அதை தொடர்ந்து 45 தூய்மை பணியாளர்களுக்கு கையுறை, பாதுகாப்பு கவசம், புடவைகள் ஆகியவற்றை ஆ. செந்தில்குமார் வழங்கினார்.

பின்னர் காஞ்சிபுரம் தலைமை அரசுமருத்துவமனை எதிரே பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மலையில் காமராஜர் வீதியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்ட தவ யோகி சஞ்சீவி ராஜா சுவாமிகள் உடல் உறுப்பு தானம், கண் தானம் செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வாழ்த்துக்களையும், ஆசிர்வாதத்தையும் தெரிவித்தார்.

இந்த பிறந்த நாள் நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய பிரமுகர்கள், காஞ்சி நகர முக்கிய பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள், கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். பொதுமக்கள் பயன்பெறும் வகையில், இளைஞர்கள் மத்தியில் உடல் உறுப்பு தானம், கண் தானம் ஆகியவற்றை விழிப்புணர்வு ஏற்படுத்த வகையில் நடத்தப்பட்ட இந்த விழா குறிப்பிடத்தக்கது.

# சீர்காழி உழவர்சந்தை, புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் கலெக்டர் நேரில் ஆய்வு



சீர்காழி, டிச. 15–

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகராட்சிக்குட்பட்ட உழவர்சந்தை, புதிய பேருந்து நிலையம், அரியப்பிள்ளைகுளம், ஐய்யனார்குளம் ஆகிய பகுதிகளை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சீர்காழி நகராட்சி பகுதியில் உள்ள உழவர் சந்தை முறையாக இயங்குகிறதா என மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து, விற்பனைக்கு உள்ள காய்கறிகளை உழவர் சந்தையில் வைத்து வியாபாரம் மேற்கொள்ளுமாறு விற்பனையாளர்களிடம் அறிவுறுத்தினார். தொடர்ந்து, சீர்காழி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சி கட்டண கழிப்பறையில் முறையாக பராமரிக்கப்படுகிறதா என மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்கள். பின்னர், சீர்காழி நகராட்சி பகுதியில் உள்ள அரியப்பிள்ளைகுளம் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1 கோடியே 11 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை மற்றும் மின்விளக்கு உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வருவதையும், பிடாரிகோவில் தெருவில் உள்ள ஐய்யனார்குளம் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.90 இலட்சத்து 97 ஆயிரம் மதிப்பீட்டில் நடைபாதை மற்றும் மின்விளக்கு உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுவருவதையும் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து, பணிகளை தரமானதாக மேற்கொள்ள வேண்டுமென நகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இவ்வாய்வின்போது, சீர்காழி நகர்மன்றத் தலைவர் துர்கா பரமேஸ்வரி, சீர்காழி நகராட்சி ஆணையர் ஹேமலதா, வட்டாட்சியர் இளங்கோவன் மற்றும் நகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.



▶ காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கிராமத்தில் குடிநீர் ஆதார அபிவிருத்தி பணி ரூ.4.16 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் கோட்டுச்சேரி கொம்யூன் அக்கம்பேட்டை கிராமத்தில் குடிநீர் ஆதார அபிவிருத்தி பணி ரூ.3.12 கோடி மதிப்பீட்டிலும் மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் பொதுப்பணித்துறையால் அமைக்க உத்தேசிக்கப்பட்டு நிகழும் நாளது நேற்று நண்பகல் 12.00 மணி அளவில் பூமி பூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா தலைமையில் பொதுப்பணி துறை கண்காணிப்பு பொறியாளர் சந்திரசேகரன், நிர்வாக பொறியாளர் மகேஷ், உதவிப் பொறியாளர் அருளரசன், நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் பாலன் மற்றும் அரசு அதிகாரிகளும், நெடுங்காடு மற்றும் அக்கம்பேட் பகுதி பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். இத்திட்டத்தின் மூலம் நெடுங்காடு கொம்யூன் அன்னவாசல், பஞ்சாச்சரபுரம், பருத்திக்குடி, கீழபொன்பேத்தி மேலபொன்பேத்தி கிராம பகுதிகள் பயன் பெறும். அக்கம்பேட் கிராம குடிநீர் திட்டதின் மூலம் கோட்டுச்சேரி மேடு, அக்கம்பேட் மீனவ கிராம பகுதிகள் பயன் பெறும்

# சின்ன ஆத்துப்பாக்கம் கிராமத்தில் ஏழு பேரை கடித்துக் குதறிய நாய்



ஊத்துக்கோட்டை, டிச15–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் ஊராட்சியை சேர்ந்த சின்ன ஆத்துப்பாக்கம் கிராமம், தர்மராஜா கோவில் தெருவில் வசித்து வருபவர் மூதாட்டி பிரபாவதி(வயது67) ஆவார்.இந்த மூதாட்டி நேற்று முன் தினம் இரவு தனது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது நாய் ஒன்று இவரது கால்,கை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடித்து குதறியது.

இதனால் அலறி துடித்து கீழே விழுந்தார். எனவே,அவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு பெரியபாளையம் அரசு ஆஸ்பத்திரியில் கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று மட்டும் கோமளா, தட்சணாமூர்த்தி, கவிதா உள்ளிட்ட மொத்தம் ஏழு பேரை நாய் கடித்து குதறி உள்ளது.

இது குறித்து ஊராட்சி மன்ற தலைவர் நிர்மலா ஞானமூர்த்தியிடம் பொதுமக்கள் முறையிட்டனர்.மேலும்,கடந்த இரண்டு மாதங்களாக நாய் பலரை கடித்து குதறியதில் பாதிக்கப்பட்டார்களாம்.நாய் கடித்ததால் பாதிக்கப்பட்டவர்கள் இங்குள்ள வைத்தியரிடம் நாட்டு மருந்து சாப்பிட்டு வருவதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர். மேலும்,நேற்று ஒரே நாளில் ஏழு பேரை நாய் கடித்துக் குதறிய சம்பவம் இக்கிராமத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காஞ்சிபுரத்தில் பார்மசி திறப்பு விழா டிவி நடிகர் புகழ் திறந்து வைத்தார்




காஞ்சிபுரம், டிச. 15–

காஞ்சிபுரம் விளக்கடி கோயில் தெருவில், QnQ பார்மசியின் 25 வது கிளையின் பிரம்மாண்ட திறப்பு விழா நேற்று காலை 11 மணி அளவில் நடைபெற்றது. இந்த திறப்பு விழாவிற்கு விஜய் தொலைக்காட்சியின் குக் வித்கோமாளிநிகழ்ச்சியின் நடிகரும், வெள்ளித்திரை நடிகருமான புகழ் கலந்து கொண்டு கிளையை ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

விஜய் டிவி புகழை கிளையின் உரிமையாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் சங்கரன் ஆகியோர் மலர் கொத்து வழங்கி வரவேற்றனர். இந்த நிகழ்ச்சிக் டாக்டர். ஞானபிரகாசம் தலைமை தாங்கினார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் QnQ பார்மசி சார்பாக மார்க்கெட்டிங்துறையின் துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், திட்டக்குழு மேலாளர் ராஜா மற்றும் காஞ்சி நகரம் முக்கிய பிரமுகர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் இளைஞர்கள், சிறுவ சிறுமிகள் பெருந்தலாக கலந்து கொண்டு விஜய் டிவி நடிகர் புகழுடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

# ரயில் விபத்தை தடுத்த மானாமதுரை ஊழியருக்கு தேசிய விருது அறிவிப்பு



மதுரை : டிச. 15, துரிதமாக செயல்பட்டு ரயில் விபத்து நேரிடாமல் தடுத்த மானாமதுரை ரயில் பாதை பராமரிப்பு பணியாளர் வீரப்பெருமாள் உள்ளிட்ட தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் 9 பேருக்கு ரயில்வே தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே துறையில் சிறப்பாக பணியாற்றும் ரயில்வே ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் தேசிய அளவில் அடி விஷிஸ்ட் ரயில் சேவா புரஸ்கார் என்ற விருது வழங்கப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான விருதுக்கு இந்திய அளவில் 100 ஊழியர்கள், அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கு ரயில்வே பிரிவில் 6 ஊழியர்கள், 3 அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் மதுரை கோட்டம் மானாமதுரை ரயில் நிலையத்தில் ரயில் பாதை பராமரிப்பு பணியாளர் கே.வீரப்பெருமாள் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார். அவர் ரயில் பாதையில் விரிசல் இருப்பதை கண்டறிந்து துரிதமாக செயல்பட்டு ரயிலை நிறுத்தியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

சென்னையில் பணியாற்றும் மதுரை கோட்ட பயணச் சீட்டு பரிசோதகர் டி.செல்வகுமார் போலி ஆதார் அட்டைகளை பயன்படுத்தி ரயில் பயணச்சீட்டில் பெயர் மாற்றம் செய்வது மற்றும் முதியோர் இட ஒதுக்கீட்டை தவறாக பயன்படுத்துவது போன்றவற்றை கண்டறிந்து அபராதம் விதித்தார். இதற்காக அவருக்கு தேசிய விருது வழங்கப்படுகிறது.

ரயில் பாதையில் நின்ற யானையை காப்பாற்ற ரயிலை நிறுத்திய ரயில் ஓட்டுநர் ஈரோடு எம்.கே. சுதீஷ்குமார், சட்ட விரோத நடவடிக்கையை தடுத்து நிறுத்திய சென்னை ரயில்வே பாதுகாப்பு படை ஆய்வாளர் மதுசூதன் ரெட்டி, எலக்ட்ரிக் ரயில் இன்ஜின் முகப்பை பழைய கால நீராவி இன்ஜின் போல மாற்றிய ஆவடி பகுதி பொறியாளர் ஏ. செல்வராஜா ஆகியோருக்கும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதய நோயாளிகளுக்கு சிறப்பாக சேவை செய்த பெரம்பூர் ரயில்வே மருத்துவ செவிலிய கண்காணிப்பாளர் துர்கா தேவி, முதல் பாரத் கவுரவ் ரயில் இயக்க உறுதுணையாக இருந்த சேலம் கோட்ட முதுநிலை வர்த்தக மேலாளர் இ.ஹரி கிருஷ்ணன், சென்னை பகுதியில் ரயில்களை அதிவேகத்தில் இயக்க ரயில் பாதையை பலப்படுத்த உறுதுணையாக இருந்த சென்னை கோட்ட முது நிலை பொறியாளர் எஸ்.மயிலேறி ஆகியோருக்கும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிக்னல் குறைபாடுகளை தவிர்க்க உறுதுணையாக இருந்த உதவி தொலைத் தொடர்பு பொறியாளர் எஸ். மாரியப்பன் ஆகியோருக்கும் தேசிய விருது வழங்கப்படுகிறது. டெல்லியில் இன்று நடக்கும் விழாவில் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் விருதுகளை வழங்குவதாக மதுரை ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.



காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் தினமும் ஏழு நபர்களுக்கு டயாலிசிஸ் சேவை இயங்கி வரும் நிலையில் டயாலிசிஸ் செய்யும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இதன் தேவையை கருத்தில் கொண்டு மக்களுக்கு சிரமத்தை குறைக்கும் நோக்கில் காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் முயற்சியாலும் காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் புதுச்சேரி முதல்வர் ஒப்புதலைப் பெற்று நான்கு புதிய டயாலிசிஸ் இயந்திரங்கள் காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வந்துள்ள நிலையில் ரூபாய் 10 லட்சம் செலவில் புதியதாக முதல் தலத்தில் அமைக்கப்பட்ட டயாலிசிஸ் மைய பணிகள் நடைபெற்று வரும் இடத்தை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். கண்ணகி மற்றும் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி மேலும் பொதுப்பணி துறையைச் சேர்ந்த நிர்வாகப் பொறியாளர் சிதம்பரநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள், மேலும் மருத்துவ கண்காணிப்பாளர் கூறுகையில் காலையில் 10 நோயாளிகளுக்கும் மதியம் 10 நோயாளிகளுக்கும் தினமும் 20 நோயாளிகளுக்கு டயாலிசிஸ் செய்யப்படும் என தெரிவித்தார்.

### நெடுஞ்சாலைத்துறையில் பணியின்போது இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு

# கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார் அமைச்சர் எ.வ.வேலு



சென்னை : டிச. 15- சென்னை தலைமைச் செயலகத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நெடுஞ்சாலைத்துறையில், பணியின்போது, இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

நெடுஞ்சாலைத்துறையில், பணியின்போது இறந்த ஈப்பு ஓட்டுநர், சாலைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், 10 கோட்டங்களில் பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட, 2 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 8 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணையினை நேற்று சென்னை, தலைமைச் செயலகத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் சாந்தி மற்றும் நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆர்.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் மின் சிக்கன வார விழா பேரணி



அரியலூர், டிச.15- அரியலூரில் மின் சிக்கன வார விழா பேரணி நடைபெற்றது

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் அரியலூர் கோட்டம் சார்பில், அரியலூர் பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலையில் இருந்து துவங்கிய, மின் சிக்கன வார விழா பேரணியை, தமிழ்நாடு மின்சார வாரியத்தின், அரியலூர் கோட்ட பொறியாளர் அய்யனார் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மின் சிக்கனத்தை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற இப்பேரணி, அரியலூர் மார்க்கெட் தெரு, மங்காயி பிள்ளையார் கோவில் தெரு, வெள்ளாளர் தெரு, மேல அக்ரஹாரத் தெரு, திருச்சி ரோடு வழியாக காமராஜர் திடலை சென்றடைந்தது.

பேரணியில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அரியலூர் கோட்ட பொறியாளர் ராஜேந்திரன், உதவி பொறியாளர் புவனேஸ்வரி, ஃபோர் மேன்கள் ராமசாமி, சங்கர், மற்றும் சுரேஷ் உள்ளிட்ட கேங்மேன்கள், ஜெயங்கொண்டம், அரியலூர் திருமானூர், செந்துறை, உடையார்பாளையம், தா பழூர், மீன்சுருட்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த உதவி கோட்ட பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், ஃபோர் மேன்கள், மின்வாரிய அலுவலர்கள் உட்பட, ஏராளமானோர் பங்கேற்றனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், அயன்ரெட்டிபட்டி ஊராட்சி இளங்காகுறிச்சி பேருந்து நிறுத்தம் அருகில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்



தென்காசி மாவட்டம் புளியங்குடியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில், துணைப் பொதுச் செயலாளரும் , கடம்பூர் சேர்மன்எஸ் வி எஸ் பி மாணிக்கராஜா உத்தரவின் பேரில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர். ராமச்சந்திர மூர்த்தி என்ற வினோத் தலைமையில், மக்கள் செல்வர் கழகப் பொதுச் செயலாளர் டி. டி.வி. தினகரன் 61-வது பிறந்த நாள் விழாவை இரட்டை பிள்ளையார் கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்று பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் ஐதர்அலி, சிறுபான்மையினர் பிரிவி மாவட்ட அமைப்பாளர்அயூப்கான், பொதுக்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியம், ஏ. எம். காஜா செய்யது ஒலி பேரூர் கழகச் செயலாளர் வடகரை, லியாக்கத் அலி நகர கழகச் செயலாளர் கடையநல்லூர், திருப்பதி அச்சம்புதூர், கிருஷ்ணசாமி ஒன்றிய செயலாளர் வாசு, காளித்துரை மாவட்ட எம்.ஜி.ஆர் மன்றத் தலைவர், கலா ராணி மாவட்ட மகளிர் அணி தலைவி, இசக்கியம்மாள் மற்றும் விழா ஏற்பாடு புளியங்குடி நகர செயலாளர் சி. ஆர். மாரியப்பன் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் அனைவரையும் வரவேற்று சால்வை அணிவித்து நன்றியுரை ஆற்றினார்.

# புதுச்சேரி மாநில முதல்வருக்கு காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனு



காரைக்கால்,டிச,15- காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்கம் இணை செயலாளர் சோமு விடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு மழை இல்லாமலும் பின்பு தொடர் மழையாலும் கால் நடை வளர்க்கும் விவசாயிகளின் நிலைமை மிகவும் கேள்வி கூறி ஆகி உள்ளது .

இன்றைய நிலைமையில் மாடுகளுக்கு உரிய பசும்தீவனம் மற்றும் வைக்கோல் கிடைப்பதுவும் இல்லை மேலும் கலப்பு தீவனத்தின் விலை உயர்வாலும் கால் நடை வளர்க்கும் விவசாயிகள் மிக பெரிய போராட்டத்திற்கு இடையேதான் பால் உற்பத்தி செய்து வருகின்றனர்.

இதனை எல்லாம் தங்களின்மேலான கருத்தில் கொண்டு தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றிற்கு ரூபாய் மூன்று ஏற்றி உள்ளது.அதை போல புதுச்சேரி அரசும் கூட்டுறவு பால் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யும் பாலுக்கு *லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் ஏற்றி வழங்கி கால் நடை வளர்க்கும் விவசாயிகள் நலன் காத்திட வேண்டும் என புதுச்சேரி முதல்வரை கேட்டுக்கொள்கிறோன் என அந்த கோரிக்கை யில் கூறப்பட்டுள்ளது

# கேரளாவிலும் வெற்றிக் கணக்கைத் தொடங்கியது ஆம் ஆத்மி : உள்ளாட்சி வார்டில் வெற்றி



இடுக்கி, டிச. 15- கேரளாவில் நடைபெற்ற உள்ளாட்சி இடைத்தேர்தலில் ஒரு வார்டில் வெற்றி பெற்று ஆம் ஆத்மி கட்சி தனது வெற்றிக் கணக்கைத் தொடங்கியுள்ளது.

ஊழலுக்கு எதிராக குரல் கொடுத்து ஆம் ஆத்மி என்ற இயக்கத்தை தொடங்கிய அர்விந்த் கேஜ்ரிவால், டெல்லி மாநில சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பெருவெற்றியைப் பெற்று இரண்டாவது முறையாக ஆட்சி நடத்துகிறார். அந்த சிறப்பான ஆட்சிக்கு பரிசாக பக்கத்து மாநிலமான பஞ்சாப்பிலும் அந்த கட்சிக்கு மக்கள் ஆதரவளித்தார்கள். அங்கும் தற்போது ஆம் ஆத்மி ஆட்சி நடத்தி வருகிறது.

கோவா மற்றும் குஜராத் மாநில தேர்தலில் போட்டியிட்டு அங்கும் மக்கள் பிரதிநிதிகளை ஆம் ஆத்மி பெற்றிருக்கிறது. இந்த நிலையில் தற்போது கேரளாவிலும் தனது வெற்றிக் கணக்கை ஆம் ஆத்மி கட்சி தொடங்கியுள்ளது.

கேரளாவில் கடந்த சில தினங்களுக்குமுன்உள்ளாட்சி அமைப்புகளுக்கான 33 வார்டுகளுக்கு இடைத்தேர்தல் நடந்தது. வாக்கு எண்ணிக்கை நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்தது. இதில் 17 வார்டுகளில் காங்கிரஸ் கூட்டணியும், 10 வார்டுகளில் இடதுசாரி கூட்டணியும், 4 வார்டுகளில் பாஜவும் வெற்றி பெற்றது.

எஸ்டிபிஐ மற்றும் ஆம் ஆத்மி ஆகிய கட்சிகள் தலா ஒரு வார்டை கைப்பற்றின. இடுக்கி மாவட்டத்திலுள்ள கரிங்குன்னம் பஞ்சாயத்தில் 7வது வார்டில் போட்டியிட்ட ஆம் ஆத்மி வேட்பாளர் பீனா குரியன் வெற்றி பெற்றார். இந்த வார்டு காங்கிரசின் வசம் இருந்தது. இந்த வெற்றியின் மூலம் கேரளாவில் ஆம் ஆத்மி கட்சி தங்களுடைய வெற்றிக் கணக்கைத் தொடங்கியுள்ளது.

# உதயநிதியை கண்டு பாஜக அஞ்சுகிறது - அமைச்சர் ரகுபதி



புதுக்கோட்டை : டிச. 15- ''அமைச்சர் உதயநிதி யாருக்கும் பயப்படாமல் தனது கருத்துக்களை கூறுவதால் அவரை கண்டு தமிழிசை உள்ளிட்ட பாஜகவினர் அஞ்சுகின்றனர்" என தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழகத்தில் சின்னதாக எதாவது சம்பவம் நடந்தாலும் தேசிய புலனாய்வு அமைப்பை அழைக்கும் பாஜகவினர் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் இம்மாதிரியான ஒரு சம்பவம் நடந்துள்ளது. எந்த அமைப்பை அழைக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இந்த சம்பவத்தின் மூலம் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பே கேள்விக்குறியாகி உள்ளது.

உதயநிதி எதையும் துணிச்சலாக பேசக் கூடியவர். அதனால் அவரை கண்டு பாஜகவினர் அஞ்சுகின்றனர். தமிழிசை ஆளுநராக இல்லாமல் இன்று தமிழக பாஜக தலைவராக தன்னை நினைத்து கொண்டிருப்பதால் தான் இப்படி பேசிக் கொண்டிருக்கிறார். எப்படி பேச வேண்டுமென எங்களது இளைஞரணி செயலாளருக்கு தமிழிசை பாடமெடுக்க தேவையில்லை. அவர் துணிச்சலாக மக்களுக்காக பேசக் கூடியவர். புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை தான் அதிகமாக பேட்டிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மற்ற ஆளுநர்கள் கொடுக்கிறார்களா என்றால் என்னை பொறுத்தவரை இல்லை'' என்றார்.

## அண்ணா பல்கலைக்கழக மண்டல அளவிலான

# குத்துச்சண்டை போட்டியில் செந்துரான் பொறியியல் கல்லூரி மாணவிகள் தங்கம் வென்று சாதனை




புதுக்கோட்டை,டிச.15- அண்ணா பல்கலைக்கழக மண்டலங்களுக்கு இடையேயான குத்துச்சண்டை போட்டி இருதினங்கள் நாமக்கல் பாவை பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. இதில் அண்ணா பல்கலைக்கழகங்களின் அனைத்து உறுப்பு கல்லூரிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். பெண்களுக்கான குத்துச்சண்டை போட்டிகளில் 52 கிலோ எடைபிரிவில் முதலாம் ஆண்டு செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை மாணவி எம். கீர்த்திகா, தங்கப் பதக்கமும் மற்றும் முதலாம் ஆண்டு மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பியல் துறை மாணவி எம்.ரேகா 57 கிலோ எடை பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்று கல்லூரிக்குப் பெருமைப் சேர்த்துள்ளனர்.

மேலும் தங்கப் பதக்கம் வென்ற மாணவி எம்.கீர்த்திகா, 484 பொறியியல் கல்லூரி மாணவிகளுக்கிடையே 52 கிலோ எடை பிரிவில் அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டி சத்தீஸ்கர் மாநிலத்தில் 23-12-2023 நடைபெறவுள்ள குத்துச்சண்டை போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக விளையாட தேர்வுசெய்யப்பட்டு மேலும் இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இப்போட்டியில் தங்கப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை புரிந்த மாணவிகளை கல்லூரி நிர்வாகம் சார்பாக ஏ.வி.எம். எஸ்.கார்த்திக், முதன்மை செயல் அதிகாரி கல்லூரியின் முதல்வர் கே. கணேஷ்பாபு ஆகியோர் வெகுவாக பாராட்டி மேலும் பல பதக்கங்களை வெல்லும் விதமாக சாதனைகளை தொடர்ந்து செய்து இக்கல்லூரிக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தியதுடன் இன்றைய காலங்களில் பெண்களுக்கு தற்காப்பு கலைகளை வளர்த்து கொள்வது அவசியம் என்றும் குத்துச்சண்டை பெண்களுக்கான ஒரு தற்காப்பு கலைகளில் சிறந்தது என்றும் அதில் நம்முடைய மாணவிகள் பதக்கங்களை வென்று மாநிலத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் இக்கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள் என்றும் இதுபோன்ற போட்டிகளில் மாணவிகள் பங்கு பெற்று தொடர் வெற்றி பெறுவதால் நல்ல அரசு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் மாணவிகளை வாழ்த்தி கௌரபடுத்தினார்கள்.

இந்நிகழ்வில் கல்லூரியின் தலைவர் ஏ.வி.எம். செல்வராஜ், துணைத்தலைவர் நடராஜன், மேலாண்மை இயக்குநர் ஆர். வயிரவன், செயலர் டி. தியாகராஜன், நிர்வாக இயக்குனர் எம். பாண்டிகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருப்போரூர் ஒன்றியத்தில் ஆயுஷ் சித்தமருத்துவபிரிவு சார்பில் மாணவர்களுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கும் நிகழ்ச்சி



செங்கல்பட்டு , டிச. 15- செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெல்லிக்குப்பம் முதல்நிலை ஊராட்சியில் சிறுங்குன்றத்தில் இயங்கிவரும் அரசு ஆரம்ப சுகாதாரா நிலையத்தில் இயங்கிவரும் ஆயுஷ் சித்தமருத்துவபிரிவு சார்பில் மாணவர்களுக்கு நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் ,தற்பொழுது பெய்துள்ள கனமழையினாலும், பருவமாற்றத்தாலும் பெரும்பாலும் எளிதில் தொற்றக்கூடிய சளி, இருமல், காய்ச்சல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கவேண்டி நிலவேம்பு கஷாயம் வழங்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆயுஷ் சித்த மருத்துவபிரிவின் செங்கல்பட்டு மாவட்ட அலுவலர் மருத்துவர் கீதாராணி முன்னிலை வகித்தார் . ஆயுஷ் சித்த மருத்துவர் வானதிநாச்சியார் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக அஇஅதிமுக கட்சியின் திருப்போரூர் தெற்கு ஒன்றிய எம்.ஜி.ஆர் .மன்றச் செயலாளர் டாக்டர் .என்.சி. பாஸ்கர் பார்த்தசாரதி கலந்துகொண்டு நிலவேம்பு இலை வேர், சுக்கு, பற்படாகம், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, பேய்புடல் உள்ளிட்ட 09 வகையான சித்தமூலிகைகளால் பள்ளிக்கூடத்திலேயே தயார் செய்யப்பட்ட நிலவேம்பு கஷாயத்தினை முதலவதாக ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பயின்றுவரும் மாணவமாணவிகளுக்கும், அதனைத்தொடர்ந்து அருகில் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கும் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார் .

இந்நிகழ்வில் பள்ளியின் ஆசிரியப்பெருமக்கள், சித்தமருத்துபிரிவினைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்கள். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறுங்குன்றம் ஆயுஷ் சித்தமருத்துவபிரிவு மருத்துவர் வானதிநாச்சியர் அனைவரையும் ஒருங்கிணைத்து செய்திருந்தார் .

# இலங்கைவசமுள்ள 45 மீனவர்கள், 138 மீன்பிடிப் படகுகளை மீட்க நடவடிக்கை தேவை : வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை : டிச. 15, இலங்கைவசமுள்ள 45 மீனவர்கள்மற்றும்138மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திடத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், “புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள், IND-TN-08-MM-26 என்ற பதிவு எண் கொண்ட இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவது இது மூன்றாவது சம்பவம்.

இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து நமது மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை மீறும் வகையில் இதுபோன்று கைது நடவடிக்கையில் ஈடுபடுவதால், மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாழ்வில் பெருத்த அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்துகிறது. இந்த ஆறு மீனவர்கள் தவிர்த்து, ஏற்கெனவே 39 மீனவர்களும், 137 படகுகளும் இலங்கைவசம் காவலில் உள்ளது.

எனவே, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, இலங்கை வசமுள்ள 45 மீனவர்கள் மற்றும் 138 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திடத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என்று முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# நான் பிரார்த்தனை செய்ய விரும்பினால் யார் தடுக்க முடியும் – மொகமது ஷமி



**புது டெல்லி : டிச. 15,**

**"நான் பிரார்த்தனை செய்ய அனுமதி கேட்க வேண்டும் என்றால், ஏன் இந்த நாட்டில் இருக்க வேண்டும். இதற்கு முன்பு 5 விக்கெட்டுகளை வீழ்த்திய பிறகு நான் எப்போதாவது பிரார்த்தனை செய்திருக்கிறேனா?" என உலகக் கோப்பை தொடரில் வைரலான வீடியோ குறித்து இந்திய வீரர் மொகமது ஷமி விளக்கம் அளித்துள்ளார்.**

கடந்த மாதம் நடைபெற்ற ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் இலங்கை அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் 302 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி அரை இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது. இப்போட்டியில் இந்திய அணி சார்பில் மொகமது ஷமி 5 ஓவர்களை வீசி ஒரு மெய்டனுடன் 18 ரன்களை மட்டும் விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

5-ஆவது விக்கெட்டை வீழ்த்திய ஷமி, உற்சாக மிகுதியில் மண்டியிட்டு தனது இரு கைகளாலும் தரையை தொடும் வீடியோ இணையத்தில் வைரலானது. இந்த வீடியோவை சமூக வலைதளங்களில் பகிர்ந்த நெட்டிசன்கள், 'வெற்றிக் கொண்டாடத்தில் முகமது ஷமி மைதானத்தில் பிரார்த்தனை செய்ய விரும்பினார். ஆனால், எதிர்ப்புகளுக்கு அஞ்சி பின்வாங்கினார்' என கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக பேட்டியளித்துள்ள ஷமி, "நான் பிரார்த்தனை செய்ய விரும்பினால், என்னை யார் தடுக்க முடியும்?. மற்றவர்களின் பிரார்த்தனையை நான் தடுக்க மாட்டேன். எனக்கு பிரார்த்திக்க வேண்டும் என தோன்றினால் நான் அதைச் செய்வேன். அதில் என்ன பிரச்சினை இருக்கிறது?. நான் ஒரு முஸ்லிம் என சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன். நான் இந்தியன் என்று பெருமையுடன் சொல்வேன். அதில் என்ன பிரச்சினை?" என்றார்.

மேலும் பேசிய அவர், "நான் யாரிடமாவது பிரார்த்தனை செய்ய அனுமதி கேட்க வேண்டும் என்றால், நான் ஏன் இந்த நாட்டில் இருக்க வேண்டும்? இதற்கு முன்பு 5 விக்கெட்டுகளை வீழ்த்திய பிறகு நான் எப்போதாவது பிரார்த்தனை செய்திருக்கிறேனா?. நான் பலமுறை ஐந்து விக்கெட்டுகளை எடுத்துள்ளேன். நான் எங்கே சென்று பிரார்த்தனை செய்ய வேண்டும் என நீங்கள் சொல்லுங்கள். நான் அங்கே சென்று பார்த்தனை செய்கிறேன்" என்று ஷமி கூறினார்.

# 6 அணிகள் பங்கேற்கும் தமிழ்நாடு வாலிபால் லீக் ஜன.3–ல் தொடக்கம்



**சென்னை : டிச. 15,**

**தமிழ்நாடு வாலிபால் சங்கம் சார்பில் முதலாவது தமிழ்நாடு வாலிபால் லீக் போட்டிகள் வரும் ஜனவரி 3-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை சென்னை மைலாப்பூரில் உள்ள சாந்தோம் உயர் நிலைப்பள்ளியில் உள்ள உள்ளரங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளன.**

இந்தத் தொடரில் சென்னை ராக்ஸ்டார்ஸ், விழுப்புரம் சூப்பர் கிங்ஸ், கிருஷ்ணகிரி புல்ஸ், விருதுநகர் கிங்மேக்கர்ஸ், குமரி பீனிக்ஸ், கடலூர் வித் அஸ் ஆகிய 6 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்த அணிகளின் உரிமையாளர்களாக ஆர்.வி.எம்.ஏ.ராஜன், ஜி.வி.வெங்கடேஷன், எம்.பி.செல்வகணேஷ், ஏ.டி.கமலாசன், ஏ.சிவா ரமேஷ், பொன் கவுதம்சிகாமணி எம்.பி., ஆகியோர் உள்ளனர். இந்த போட்டி தொடர்பான அறிவிப்புமற்றும் அணிகளின் அறிமுகம் நேற்று முன்தினம் புதன்கிழமை சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் உள்ள அரங்கில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு வாலிபால் லீக் கமிட்டியின் தலைவர் ஆர்.அர்ஜூன் துரை, தமிழ்நாடு வாலிபால் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஜே.மார்ட்டின் சுதாகர், பொருளாளர் எம்.பி.செல்வகணேஷ், முன்னாள் துணைத் தலைவர் ஆர்.கே.துரை சிங், உறுப்பினர்செயலர் சி.ஸ்ரீகேசவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் போட்டிக்கான லோகோ வெளியிடப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு அணியும் அவர்களுக்கான லோகோவும் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு வாலிபால் லீக் தொடரின் மொத்த பரிசுத் தொகை ரூ.10 லட்சம் ஆகும். போட்டிகள் ரவுண்ட்ராபின் முறையில் நடத்தப்பட உள்ளன. லீக் சுற்றில் முதலிடத்தை பிடிக்கும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும். 2-வது மற்றும் 3-வது இடத்தை பிடிக்கும் அணிகள் பிளே ஆஃப் சுற்று ஆட்டத்தில் மோதும். இதில் வெற்றி பெறும் அணி 2-வது அணியாக இறுதிப் போட்டியில் கால்பதிக்கும். இந்தத் தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ரூ.5 லட்சம் வழங்கப்பட உள்ளது. 2-வது இடத்தை பிடிக்கும் அணி ரூ.3 லட்சத்தையும், 3-வது இடத்தை பிடிக்கும் அணி ரூ.2 லட்சத்தையும் பெறும்.

# அவரிடம் இருந்து நிறைய கற்றுள்ளேன் அஸ்வின்தான் என் கிரிக்கெட் குருநாதர்

## நாதன் லயன் நெகிழ்ச்சி



**பெர்த் : டிச. 15,**

**பாகிஸ்தான் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் நேற்று பெர்த் நகரில் தொடங்கியது. இந்தப் போட்டியில் களமிறங்கும் நாதன் லயன் 500 விக்கெட்டுகளை தொட இருக்கிறார்.**

இந்த நிலையில் அவர் அளித்த பேட்டி:- நீங்கள் அஸ்வினை பாருங்கள். அவர் ஒரு உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சாளர். என் கிரிக்கெட் ஆரம்ப காலத்தில் இருந்தே நான் அஸ்வினை கவனித்து வருகிறேன். அவருடைய நுணுக்கங்கள் குறித்து நான் எப்போதுமே பார்ப்பதுண்டு. நாங்கள் இருவரும் எதிருக்கு எதிராக மோதிக் கொண்டிருக்கிறோம். பல கடினமான சூழல்களில் விளையாடி இருக்கிறோம். எனக்கு எப்போதுமே அஸ்வின் மீது தனி மரியாதை இருக்கிறது. நான் அஸ்வினின் பந்துவீச்சில் இருந்து நிறைய கற்றுக் கொண்டிருக்கின்றேன்.

நான் எப்போதும் யாருக்கு எதிராக விளையாடுகிறோமோ அவர்களிடம் இருந்து நல்ல விஷயங்களை நாம் கற்றுக் கொள்ளலாம். எனக்கே தெரியாமல் அஸ்வின் என்னுடைய கிரிக்கெட் குருநாதர் ஆக கூட விளங்கி இருக்கிறார். நாங்கள் இருவரும் 500 விக்கெட் என்ற மைல் கல்லை நோக்கி செல்ல இருக்கிறோம். அதை நினைக்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நாங்கள் இருவரும் எவ்வளவு விக்கெட் எடுக்கப் போகிறோம் என்பது குறித்து இன்னும் எனக்கு தெரியவில்லை.

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கை முடிந்த பிறகு நான் அஸ்வினுடன் அமர்ந்து நிறைய விஷயங்கள் பேச வேண்டும் என நினைக்கிறேன். அஸ்வினை இந்தியாவுக்கு வெளியே கொண்டாடப்படுவதை விட இந்தியாவில் அவரை யாரும் அவ்வளவாக கொண்டாடுவதில்லை என்று அவர் கூறினார். இதுவரை 122 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள நாதன் லயன் 496 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார். நம்ம அஸ்வின் 94 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 489 விக்கெட் கைப்பற்றி இருக்கிறார். அதிவேகமாக 500 (87 டெஸ்ட் போட்டிகளில்) விக்கெட்டுகளை தொட்ட வீரர் என்ற பெருமை இன்னும் முரளிதரன் இடமே இருக்கிறது.

# அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஐபிஎல் தொடரில் மீண்டும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் கேப்டனாக களமிறங்கும் ஸ்ரேயஸ்



**கொல்கத்தா : டிச. 15,**

**அடுத்த ஆண்டுநடைபெற உள்ள ஐபிஎல் தொடரில் ஸ்ரேயஸ் ஐயர் மீண்டும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் கேப்டனாக செயல்படுவார் என அந்த அணியின் உரிமையாளர் அறிவித்துள்ளார். மேலும் கடந்த ஐபிஎல் கொல்கத்தா அணியின் கேப்டனாக இருந்த நிதிஷ் ராணா துணை கேப்டனாக இருப்பர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் உரிமையாளர் நேற்று ஸ்ரேயாஸ் ஐயர் கேப்டனாக தொடருவார் என்றும், நிதிஷ் ராணா துணை கேப்டனாக இருப்பார் என்றும் அறிவித்தார். அறிவிப்பை வெளியிட்டு அவர் கூறியதாவது: "காயம் காரணமாக ஸ்ரேயாஸ் ஐபிஎல் 2023-ஐ தவறவிட்டது உண்மையில் துரதிர்ஷ்டவசமானது.

அவர் மீண்டும் கேப்டனாக பொறுப்பேற்றதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த சீசனில் நிதிஷ் ராணா கேப்டனாக சிறப்பாக செயல்பட்டதற்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். வரும் ஐபிஎல் தொடரில் துணை கேப்டனாக இருக்கும் நிதிஷ், கொல்கத்தா அணியின் நலனுக்காக ஸ்ரேயாஸை எல்லா வழிகளிலும் ஆதரிப்பார் என்பதில் சந்தேகமில்லை" என தெரிவித்துள்ளார்.

மேலும் ஷ்ரேயாஸ் ஐயர் கூறியதாவது: கடந்த சீசன் எங்களுக்கு பலவற்றை கற்றுக்கொடுத்தது. நிதீஷ் சிறப்பாக செயல்பட்டார். கொல்கத்தா அணியின் அவரை துணை கேப்டனாக நியமித்ததில் மகிழ்ச்சி" என தெரிவித்துள்ளார்.

வரலாறு சினிமா

# ஆணாதிக்கம், வன்முறை, அபத்தம் – 'அனிமல்' படத்தை விமர்சித்த ஒளிப்பதிவாளர் சித்தார்த்தா நுனி



**சென்னை : டிச. 15,**

**வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'விஜய் 68' படத்தின் ஒளிப்பதிவாளர் சித்தார்த்தா நுனி, சமீபத்தில் வெளியான ரன்பீர் கபூரின் 'அனிமல் படத்தை காட்டமாக விமர்சித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "நான் நேற்று 'அனிமல்' படத்தைப் பார்த்தேன். உண்மையாகவே இந்தப் படம் என்னை கோபத்தில் ஆழ்த்தியது. மார்பில் ஸ்வஸ்திகா குறியீட்டுடன் நாஜியைப் பெருமைப்படுத்துகிறது. 'ஆல்ஃபா மேல்' என்று ஆணாதிக்கத்தை நியாயப்படுத்துவது, சட்டத்துக்கு எதிரான வன்முறைகள், திருமணம் என்ற பெயரில் நடக்கும் பாலியல் வன்முறை, தவறான உறவுமுறைகள் எனப் பல விஷமக் கருத்துகள் இப்படத்தில் இருக்கின்றன.

மிருகத்தனத்துடன் நடந்துகொள்ளும் கணவனிடம், பெண் ஒருவர் அமைதியாக எதுவும் பேசாமல் இருப்பதுபோல் காட்சிப்படுத்தியிருப்பது அபத்தம். அதுவும் படத்தின் இறுதிக் காட்சியில் ரன்பீர் கபூரை ஆபாசமான செய்கைகளுடன் காட்சிப்படுத்தியிருப்பது பார்வையாளர்களின் மனதை புண்படுத்தும் செயல். அதிக வசூலை குவித்து வரும் இப்படம், நாம் வாழும் இந்த நாட்டின் சமூக நிலையைப் பிரதிபலிக்கிறதா?

அது மட்டுமின்றி 'A' தணிக்கை சான்றிதழ் பெற்ற இப்படத்தை நான் ஹைதராபாத்தில் பார்த்தபோது திரையரங்கில் சிறுவயதினர் பலரைப் பார்த்தேன். தணிக்கைக் குழுவும், அவர்களின் பொறுப்பும் எங்கே சென்றுவிட்டது என்று தெரியவில்லை" என்று விமர்சித்துள்ளார். 'யூடர்ன்', 'வெந்து தணிந்தது காடு' ஆகிய படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ள சித்தார்த்தா நுனி தற்போது 'கேப்டன் மில்லர்' மற்றும் விஜய் 68 படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

# பழம்பெரும் இயக்குநர் ரா.சங்கரன் காலமானார்



**சென்னை : டிச. 15,**

**இயக்குநரும், 'மௌனராகம்' படத்தில் ரேவதி அப்பாவாக நடித்தவருமான ரா.சங்கரன் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார். அவருக்கு வயது 92.**

'ஒரு கைதியின் டைரி', 'பகல் நிலவு', 'அழகர் சாமி', 'மௌன ராகம்' உள்ளிட்ட ஏராளமான படங்களில் அவர் நடித்துள்ளார். நடிகராக மட்டுமல்லாது, 'தேன் சிந்துதே வானம்', 'தூண்டில் மீன்', 'வேலும் மயிலும் துணை' போன்ற படங்களையும் அவர் இயக்கியுள்ளார். இயக்குநர் பாரதிராஜா இவரிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்துள்ளார்.

இந்நிலையில் உடல்நலக்குறைவு காரணமாக ரா.சங்கரன் நேற்று காலமானார்.

இவரது மறைவுக்கு இயக்குநர் பாரதிராஜா தனது எக்ஸ் தள பக்கத்தில் இரங்கல் தெரிவித்துள்ளார். அதில், "எனது ஆசிரியர் இயக்குநர் ரா.சங்கரன் அவர்களின் மறைவு வேதனை அளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்' எனக் கூறியுள்ளார். ரா.சங்கரன் மறைவுக்கு திரைத்துறையினரும் ரசிகர்களும் தங்களது அஞ்சலியை செலுத்தி வருகின்றனர்.

# உண்மைச் சம்பவத்தை கருவாக வைத்து உருவாகி இருக்கும் 'வட்டார வழக்கு'



**சென்னை : டிச. 15,**

**வட்டார வழக்கை மையப்படுத்தி உருவாகிவரும் புதிய படம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. படத்திற்கு தலைப்பே 'வட்டார வழக்கு' என பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. அதற்கேற்ப கதைக்களமும் புதிதாக இருக்கும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.**

பொதுவாக பிராந்தியத்தை சார்ந்த படங்களும், வட்டாரத்தை சார்ந்த படங்களும், அதில் பேசப்படும் வட்டார மொழிகளும் வெகு ஜனங்களைச் சேரும். அதன் மூலம் பெரும் அப்படங்கள் வெற்றிபெறும் என்பது திரை உலகத்தின் நம்பிக்கை. அதை மையக் கருவாகக் கொண்டு உருவாகி இருக்கிறது 'வட்டார வழக்கு'. இப்படம் டிசம்பர் 29-ல் திரைக்கு வருகிறது.

இயக்குநர் கண்ணுச்சாமி ராமச்சந்திரன் இயக்கத்தில் 'டூலெட்' பட புகழ் சந்தோஷ் நம்பிராஜன் மற்றும் ரவீனா ரவி இப்படத்தில் நடித்துள்ளனர். மதுரை மாவட்டத்தில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படத்திற்கு இளையராஜா இசையமைத்திருக்கிறார்.

# 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' படத்தை காண இருக்கும் கிளிண்ட் ஈஸ்ட்வுட் – கார்த்திக் சுப்பராஜ் உற்சாகம்



**சென்னை : டிச. 15,**

**பிரபல ஹாலிவுட் நடிகர் க்ளிண்ட் ஈஸ்ட்வுட் விரைவில் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' பார்க்க இருக்கிறார் என அவரது எக்ஸ் தள பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தகவலை அறிந்த இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் "படத்தை பற்றிய அவரது கருத்துகளை அறிய ஆவலாக இருக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.**

கடந்த தீபாவளி பண்டிகையையொட்டி திரையரங்குகளில் வெளியான படம் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்', கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இப்படத்தில் ராகவா லாரன்ஸ், எஸ்.ஜே.சூர்யா, நிமிஷா சஜயன் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இப்படத்தின் நாயகன் ராகவா லாரன்ஸ் பிரபல ஹாலிவுட் நடிகர் கிளிண்ட் ஈஸ்ட்வுட்டின் ரசிகராக நடித்திருப்பார். மேலும் படம் நெடுங்களிலும் ஈஸ்ட்வுட்டின் ரெஃபரன்ஸ் இருந்து கொண்டேயிருக்கும்.

இந்நிலையில் எக்ஸ் தளத்தில் ரசிகர் ஒருவர், "இந்தியாவிலிருந்து ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் என்கிற தமிழ் படத்தை எடுத்திருக்கிறோம். நெட்பிளிக்ஸில் இருக்கிறது. படம் முழுக்க உங்கள் பங்களிப்பைக் காட்சிப்படுத்தி இருக்கிறோம். அனிமேஷன் காட்சிகளில் உங்களின் இளம் வயதைக் காட்டியிருக்கிறோம். வாய்ப்பு கிடைக்கும்போது கண்டிப்பாக இப்படத்தைப் பாருங்கள்" எனக் கூறி க்ளிண்ட் ஈஸ்ட்வுட்டின் அதிகாரபூர்வ எக்ஸ் பக்கத்தை டேக் செய்திருந்தார்.

இதற்கு அந்தக்கணக்கிலிருந்து பதில் வந்துள்ளது. அதில், "ஹாய். கிளிண்ட் ஈஸ்ட்வுட் அப்படத்தைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறார். இப்போது, நடித்துக்கொண்டிருக்கும் படத்தின் பணிகள் முடிந்ததும் அந்தப் படத்தை (ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்) பார்ப்பார். நன்றி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அறிந்த இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் தனது எக்ஸ் பதிவில், "நம்ப முடியவில்லை. படத்தைப் பார்த்துவிட்டு ஈஸ்ட்வுட் கூறும் கருத்துகளுக்காகக் ஆவலாக காத்திருக்கிறேன். ஆசிர்வதிக்கப்படவான உணர்கிறேன். இதை சாத்தியப்படுத்திய ரசிகர்களுக்கு நன்றி" என உற்சாகமாகத் தெரிவித்துள்ளார்.

# சென்னை மிக்ஜாம் புயல் பாதிப்பு நிவாரண நிதி அள்ளிக்கொடுத்த நடிகர் சூரி



**சென்னை : டிச. 15,**

**மிக்ஜாம் புயல் பாதிப்புக்கு திரையுலகைச் சேர்ந்த பல பிரபலங்களும் உதவி வரும் நிலையில், நடிகர் சூரியும் நிவாரண நிதி கொடுத்துள்ளார்.**

கடந்த வாரத்தில் மிக்ஜாம் புயல்பாதிப்பால் சென்னையில் பல இடங்கள் பாதிப்படைந்தது. தன்னார்வலர்களோடு சேர்ந்து பல திரைப்பிரபலங்களும் களத்தில் இறங்கி உதவி செய்து வருகின்றனர். அதேபோல, பொருளாதார உதவியும் செய்கின்றனர். புயல் கரையை கடந்து பத்து நாட்கள் ஆகியும் பள்ளிக்கரணை, வேளச்சேரி, கூடுவாஞ்சேரி உள்ளிட்ட பல பகுதிகளில் வெள்ள நீர் குறையாமல் உள்ளது. இந்த நிலையில் பல திரைப்பிரபலங்களும் முதல்வர் நிவாரண நிதிக்கும் பொருளாதார உதவி செய்து வருகின்றனர். அந்தவரிசையில் நடிகர் சூரி இப்போது முதல்வர் நிவாரண நிதிக்கு ரூ.10 லட்சம் வழங்கியுள்ள தகவலை உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது, 'தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் மிக்ஜாம் புயல் கன மழை நிவாரணப் பணிகளுக்கு துணை நிற்கின்ற வகையில், சமூக அக்கறையுடன் பலரும் நிதியுதவி அளித்து வருகின்றனர். அந்த வகையில், திரைப்பட நடிகர் சகோதரர் சூரி மற்றும் மதுரை அம்மன் உணவகம் சார்பில் ரூ.10 லட்சத்துக்கான காசோலையை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 'தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு நேற்று நம்மிடம் வழங்கினார். அவருக்கு என் அன்பும், நன்றியும்' எனக் கூறியுள்ளார்.

▶ **தனி ஒருவன் 2வில் அபிஷேக் பச்சன் :** மோகன் ராஜாவின் தனி ஒருவன் பட இரண்டாம் பாகத்தில் பிரபல பாலிவுட் நடிகர் அபிஷேக் பச்சன் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வந்துள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு இயக்குநர் மோகன் ராஜா இயக்கத்தில் நடிகர்களான ஜெயம் ரவி, நயன்தாரா, அரவிந்த் சாமி, தம்பி ராமையா ஆகியோரது நடிப்பில் வெளியாகி சூப்பர் ஹிட்டான படம் 'தனி ஒருவன்'. விறுவிறு காட்சிகள் கொண்ட படத்தில் மிரட்டலான வில்லனாக அரவிந்த் சாமி அசத்தியிருப்பார். இந்த நிலையில் அந்த படத்தின் இரண்டாம் பாகம் தயாராகவுள்ளது. அது குறித்த அப்டேட் தான் தற்போது வந்துள்ளது. அதாவது தனி ஒருவன்2 படத்தில் வில்லனாக நடிக்க ஐஸ்வர்யா ராயின் கணவரான அபிஷேக் பச்சனிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறதாம், இந்த படத்தில் பாலிவுட் வரை சென்று வில்லனை தேர்வு செய்வதால் அரவிந்த சாமி கதாபாத்திரத்தை விட இது மிகவும் பவர் ஃபுல்லாக இருக்கும் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# விமானத்தில் 'லுட் புட் கயா' பாடலுக்கு நடனமாடிய ஷாருக்கான் ரசிகர்கள்



**மும்பை : டிச. 15,**

**ராஜ்குமார் ஹிரானி இயக்கத்தில் ஷாருக்கான் நடித்திருக்கும் டங்கி திரைப்படம் அடுத்த வாரத்தில் வெளியாக உள்ளது.**

பாடல்கள், டிரெய்லர் என வரிசையாக படத்தின் அப்டேட்கள் மூலம் பார்வையாளர்களை உற்சாகமூட்டி வருகிறார்கள். இந்நிலையில் ஷாருக் ரசிகர்கள் அவர் மீதான தங்கள் அன்பை வெளிப்படுத்துவதில் எந்த வாய்ப்பையும் தவறவிடுவதில்லை.

சமூக ஊடகங்களில் பரவி வரும் ஒரு வீடியோவில் எஸ்.ஆர்.கே. ரசிகர்கள் டங்கி டிராப் 2 லுட் புட் கயா பாடலுக்கு விமானத்தில் நடமாடுகிறார்கள். மும்மை பூங்கா ஒன்றில் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான விமான செட்டில் அவர்களின் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. டங்கி படத்தில் ஷாருக்கான் உடன் பூமன் இரானி, டாப்ஸி பண்ணு, விக்கி கௌஷல், விக்ரம் கோச்சார், அனில் குரோவர் உள்ளிட்ட நட்சத்திரக்குழு நடித்துள்ளது. டிசம்பர் 21-ம் தேதி படம் உலகம் முழுவதும் வெளியாகிறது.

வரலாறு உலகம்

# சர்வதேச நாடுகளின் ஆதரவு இல்லாவிட்டாலும் போர் தொடரும் – இஸ்ரேல் திட்டவட்டம்



**இஸ்ரேல் : டிச. 15,**

**சர்வதேச நாடுகளின் ஆதரவு இருந்தாலும் அல்லது ஆதரவு இல்லாவிட்டாலும் போர் தொடரும் என இஸ்ரேல் வெளியுறவுத்துறை மந்திரி எலி கோஹன் தெரிவித்துள்ளார்.**

இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதால், ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் போர் பிரகடனம் செய்து காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதல் இரண்டு மாதங்களை கடந்து 2-வது மாதமாக நடைபெற்று வருகிறது. இந்த போர் வடக்கு காசாவை முற்றிலும் சீர்குலைத்துள்ளது. தெற்கு காசாவில்உள்ளகான்யூனிஸ் பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்கும் வரை போர் ஓயாது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தொடக்கத்தில் இருந்தே இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்து வருகிறது. தற்போது பாலஸ்தீன மக்கள் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர். மேலும், பிணைக்கைதிகள் முழுமையாக மீட்கப்படாமல் உள்ளனர். இதனால் உலக நாடுகள் போர் நிறுத்தம் தேவை என வலியுறுத்தி வருகின்றனர். ஐ.நா. சபையில் 153 நாடுகள் போர் நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளனர். அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்த போதிலும், போர் நிறுத்தம் தேவை என இஸ்ரேலுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் சர்வதேச நாடுகள் ஆதரவோடு அல்லது ஆதரவு இல்லாவிட்டாலும் போர் தொடரும் என இஸ்ரேல் வெளியுறவுத்துறை மந்திரி எலி கோஹன் தெரிவித்துள்ளார். மேலும், "தற்போதைய நிலையில் போர் நிறுத்தம் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினருக்கு பரிசு போன்று அமைந்துவிடும். அவர்கள் திரும்ப வந்து இஸ்ரேல் மக்களுக்கு மிரட்டல் கொடுக்க அனுமதித்துவிடும்" என்றார்.

இந்த சூழலில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் நேற்று இஸ்ரேல் சென்றார். இஸ்ரேல் செல்லும் அவர் நேதன்யாகுவை சந்திக்கிறார். இதற்கிடையே, போருக்குப்பின் காசாவை கையாளப்படும் விவகாரத்தில் கருத்துவேறுபாடு இருப்பதாக தெரிவித்துள்ளார்.

# கீவ் நகரை குறிவைத்து ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## 50 பேர் படுகாயம்



**கீவ் : டிச. 15,**

**உக்ரைன் தலைநகரான கீவ் நகரை குறி வைத்து, ரஷ்யா ராணுவம் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

ரஷ்யா- உக்ரைன் இடையேயான போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து வரும் நிலையில், ரஷ்யா பல்வேறு வகையான தாக்குதல்களை தொடர்ந்து வருகிறது. இந்நிலையில் கீவ் நகரை குறி வைத்து நேற்று அதிகாலை 3 மணியளவில் ரஷ்யா ஏவிய 10 ஏவுகணைகளை உக்ரைன் விமான பாதுகாப்பு படை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியது. எனினும் ராக்கெட் ஏவுகணைகளின் உடைந்த பாகங்கள் கீழே விழுந்து நொறுங்கியதில் பொதுமக்கள் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயம் அடைந்த இரண்டு குழந்தைகள் உட்பட 20க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதலில் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் ஏராளமான வாகனங்கள் தீக்கிரையாகி உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ஒடேசா பகுதியில் ரஷ்யாவால் ஏவப்பட்ட 10 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, அதிபர் ஜோ பைடனை சந்தித்து ஆலோசனை மேற்கொண்ட நிலையில் இந்த தாக்குதல்கள் அரங்கேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சீனாவை கடுமையாக தாக்கும் பனிப்புயல் பள்ளிகள், சாலைகள் மூடல்



**பெய்ஜிங் : டிச. 15,**


**வடக்கு மற்றும் மத்திய சீனாவில் சில பகுதிகளில் ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக கடுமையான பனிப்புயல் தாக்கியுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.**

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருவதையடுத்து அங்குள்ள பள்ளிகள் மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள இயற்கை இடங்கள் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டுள்ளன. பெய்ஜிங் மற்றும் சீனாவின் வடமேற்கு சின்ஜியாங் பகுதியில் அதிகப்படியான பனி மற்றும் காற்று வீசி வருவதால் பல ரயில்கள் ரத்து செய்யப்பட்டன.

பெய்ஜிங்கின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் 5 முதல் 15 செ.மீ (2 முதல் 6 அங்குலங்கள்) வரையும், சில இடங்களில் 20 செ.மீ (8 அங்குலங்கள்) வரை பனி இருக்கக்கூடும். மேலும், சிலதினங்கள் பனிப்புயல் தொடரும் என வானிலை ஆய்வு மைய நிர்வாகம் கணித்துள்ளது.

கடும் பனிப்புயல் காரணமாக மாகாணம் முழுவதும் மொத்தம் 100 நெடுஞ்சாலைகள், பிற சாலைகளும்மூடப்பட்டுள்ளன. பெரும்பாலான ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. வட சீனாவின் ஷாங்க்சி மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளைப் பனிப்புயல் தாக்கியது. அங்கு போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பனிப்பொழிவைத் தொடர்ந்து கடும் குளிர் நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வாரம் வட சீனா முழுவதும் வெப்பநிலை குறையும் எனவும் கணித்துள்ளது.

# போலந்து புதிய பிரதமர் டொனால்ட் டஸ்க் பதவியேற்பு



**வார்சா : டிச. 15,**

**போலந்து நாட்டில் அக்டோபர் 15ம் தேதி தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பிஜஎஸ் கட்சி வெற்றி பெற்றது.**

நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் முன்னாள் பிரதமர் மொராவிக்கி தோல்வியடைந்தார். இதனை தொடர்ந்து போலந்து சார்பு ஐரோப்பிய ஒன்றியத்தின் டொனால்ட் டஸ்க் தலைமையிலான எதிர்கட்சி கூட்டணி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றன. போலந்தின் புதிய பிரதமராக டொனால்ட் டஸ்க் பிரதமராக பதவியேற்றுக்கொண்டார். அவரை தொடர்ந்து அமைச்சர்கள் பதவியேற்றனர்.

# இந்திய கப்பல் மீதும் ஏவுகணை தாக்குதல்

## செங்கடலில் 'ஹவுதி' தொடர் அராஜகம்



**ஏமன் : டிச. 15,**

**இந்தியாவிலிருந்து ஜெட் விமான எரிபொருளை ஏற்றிக்கொண்டு, செங்கடல் வழியாகச் சென்று கொண்டிருந்த கப்பல் மீது யேமன் கிளர்ச்சியாளர்கள் படையான ஹவுதி அமைப்பு ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

செங்கடல் பகுதியில் இஸ்ரேலுக்கு ஆதரவாக வரும் கப்பல்களை தாக்கி அழிப்போம் என்று ஏமன் கிளர்ச்சிப்படையான ஹவுதி அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்தது. அதைத்தொடர்ந்து அந்த வழியாக செல்லும் அனைத்து கப்பல்களையும் அந்த அமைப்பு தாக்குதல் நடத்தி வருகிறது. செவ்வாய்கிழமை அன்று நார்வே எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்திய ஹவுதி அமைப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை இந்திய கப்பலையும் தாக்கியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில், "இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஜெட் விமான எரிபொருளை ஏற்றிக்கொண்டு கர்நாடகத்தின் மங்களூரு துறைமுகத்திலிருந்து மார்ஷல் ஐலண்ட் கொடியுடன் செங்கடலில் வந்து கொண்டிருந்த 'ஆர்ட்மர் என்கவுன்டர்' கப்பலை நோக்கி நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 2 ஏவுகணைகள் வீசப்பட்டன.

முக்கியத்துவம் வாய்ந்த பாப் எல்-மண்டெப் நீரிணைக்கு அருகே அந்தக் கப்பல் வந்துகொண்டிருந்தபோது, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள யேமன் பகுதியிலிருந்து அந்த ஏவுகணைகள் வீசப்பட்டன. எனினும், அந்த ஏவுகணைகள் குறி தவறிக் கடலுக்குள் விழுந்தன. இந்தச் சம்பவத்தின்போது கிளர்ச்சியாளர்களின் டிரோன் ஒன்றை அமெரிக்க போர்க் கப்பல் சுட்டுவீழ்த்தியது" என்று அதிகாரிகள் கூறினர்.

ஹவுதி கிளர்ச்சியாளர்களால் குறிவைக்கப்பட்ட எரிபொருள் கப்பலில் ஆயுதம் ஏந்திய பாதுகாவலர்கள் இருந்ததாகவும், படகில் வந்து அந்தக் கப்பலில் ஏற முயன்றவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அந்தப் பாதுகாவலர்கள் விரட்டியடித்ததாகவும் தனியார் உளவுநிறுவனமான ஆம்ப்ரே தெரிவித்துள்ளது. காஸா போர் விவகாரத்தில் எரிபொருள் கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளது இதுவே முதல்முறையாகும். எனினும், இந்தத் தாக்குதலுக்கு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

கடந்த திங்கள்கிழமை இரவுகூட, நார்வே கொடியேற்றப்பட்ட சரக்குக் கப்பலொன்றின் மீது யேமன் நாட்டின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தினர். எனினும், இதில் யாரும் காயமடையவில்லை என்று அந்தக் கப்பலை இயக்கி வரும் நிறுவனம் தெரிவித்தது. இதுபோன்ற தாக்குதல்களால் ராணுவரீதியில் எந்தப் பலனும் இல்லை என்றாலும், யேமனில் தங்களுக்கான ஆதரவைப் பெருக்கிக் கொள்வதற்காக கிளர்ச்சியாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கருதப்படுகிறது.

# சீனா, ரஷ்யாவின் அச்சுறுத்தல்

## 3 நாடுகள் இணைந்து உருவாக்கும் போர் விமானம்



**ஜப்பான் : டிச. 15,**

**ஜப்பான், பிரிட்டன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ஒன்றாக இணைந்து புதிய ரக போர் விமானத்தை உருவாக்க ஒப்பந்தமிட்டுள்ளனர்.**

சீனா, ரஷ்யா, வடகொரியா போன்ற நாடுகளால் வலுத்துவரும் அச்சுறுத்தல்களிலிருந்து தங்கள்நாட்டினைப்பாதுகாக்க இந்தக் கூட்டு முயற்சியை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். ஜப்பான் மற்ற நாடுகளுடன் சேர்ந்து இராணுவ உபரகரணங்களை உற்பத்தி செய்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து பேசிய ஜப்பான் பாதுகாப்புத் துறை அமைச்சர் மினாரு கிஷாரா, நாட்டின் வான்வழி பாதுகாப்பை உறுதி செய்ய அதிக திறன்கொண்ட போர் விமானங்களை உருவாக்குவது தவிர்க்க முடியாதது எனக்கூறியுள்ளார். ஜப்பானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் உருவாகிவரும் இந்த நேரத்தில் இந்த புதிய போர் விமானத்தை உருவாக்குவது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடு தனியாக ஒரு போர் விமானத்தை உருவாக்க தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் தேவைப்படும். மூன்று நாடுகளும் இணைந்து இந்த போர் விமானத்தை உருவாக்குவது அந்த வகையிலான நெருக்கடிகளை குறைக்கிறது எனவும் கூறியுள்ளார்.

மிட்சுபிஷி எஃப் - எக்ஸ் என அழைக்கப்படும் இந்த ஜெட் விமானத்தின் தயாரிப்பு மூன்று நாடுகளில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களின் மேற்பார்வையில் நடைபெறும். இதற்கு ஜப்பான் தலைமையேற்றுள்ள நிலையில், தலைமைப் பொறுப்பு சில ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்பட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்ட 4 வயது சிறுவன் 6 மாதத்திற்குப் பின் பெற்றோர் மீது நடவடிக்கை

**பென்சில்வேனியா : டிச. 15,**

**அமெரிக்காவில் 4 வயது சிறுவன் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்ட சம்பவத்தில், அஜாக்கிரதையாக இருந்த பெற்றோர் மீது நடவடிக்கை பாய்ந்துள்ளது.**

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ளது வெஸ்ட்மோர் கவுண்டி. இதன் ஆளுகைக்கு கீழ் உள்ள ரோஸ்ட்ராவர் டவுன்ஷிப் குடியிருப்பு பகுதியில் 4 வயதான ரோனி லின் என்ற சிறுவன் கடந்த ஜூலை 6-ம் தேதி தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டான்.

படுக்கையறையில் கிடந்த சிறுவனை மீட்ட பெற்றோர் உடனடியாக மருத்துவமனைக்கு விமானம் மூலம் கொண்டு சென்றனர். அச்சிறுவன் கடந்த 6 மாத காலமாக தொடர் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறான்.

இதுகுறித்து போலீஸார் தீவிர விசாரணை நடத்தியதில், சிறுவனின் பெற்றோர்களான லாரா ஸ்டீல் மற்றும் மைக்கேல் லின் ஆகியோர் அஜாக்கிரதையாக செயல்பட்டு குழந்தையின் நலனுக்கு ஆபத்தை விளைவித்தாக தெரியவந்துள்ளது.

இருவரும் கட்டிலுக்கு அடியில் குழந்தை கையாளும் வகையில் துப்பாக்கியை வைத்திருந்துள்ளனர். வீட்டில் யாரும் இல்லாத நேரம் அந்த சிறுவன் விளையாடும் போது துப்பாக்கியை எடுத்து, தெரியாமல் தன்னைத் தானே சுட்டுக்கொண்டது தெரிய வந்தது. இதையடுத்து, இச்சம்பவம் தொடர்பாக சிறுவனின் பெற்றோர்



மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள மாவட்ட வழக்கறிஞர் நிக்கோல் ஜிக்கரெல்லி "இது ஒரு சோகமான ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவம். இப்படியான சம்பவம் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கான மிக எளிய தீர்வு உள்ளது. பெற்றோர், பெரியவர்கள் தங்களது சொந்த உபயோகத்துக்கான துப்பாக்கிகளைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்க வேண்டியது அவசியம்" எனத் தெரிவித்துள்ளார்.

# அரசு ரகசியங்களை கசியவிட்டதாக வழக்கு

## இம்ரான்கான் மீது குற்றச்சாட்டுகள் பதிவு



**இஸ்லாமாபாத் : டிச. 15,**

**பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் தலைவர் இம்ரான்கான். இவருக்கு வயது 71. இவர், 2018 முதல் ஏப்ரல் 2022, வரையிலான காலகட்டத்தில் பாகிஸ்தானின் பிரதமராக பதவி வகித்தார். முன்னாள் கிரிக்கெட் வீரராகவும் இருந்தார்.**

இம்ரான்கான் தன்னுடைய பதவி காலத்தில் வெளிநாட்டு தலைவர்களிடம் இருந்து பெற்ற பரிசு பொருட்களை அரசு கருவூலத்தில் ஒப்படைக்காமல் முறைகேடாக விற்று சொத்து சேர்த்ததாக வழக்கு தொடரப்பட்டது. இதில், அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் கடந்த ஆகஸ்ட் மாதம் தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுவை இஸ்லாமாபாத் ஐகோர்ட் விசாரித்தது. இதில், இம்ரான்கானுக்கு விதிக்கப்பட்ட 3 ஆண்டு சிறை தண்டனைக்கு இடைக்கால தடைவிதித்து, அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டது. ஆனால் பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய ரகசிய தகவல்களை கசியவிட்டதாக கூறி தொடரப்பட்ட 'சிபர்' வழக்கில் இம்ரான் கைது செய்யப்பட்டார். இதனால் அவர் தொடர்ந்து சிறையில் உள்ளார்.

இந்நிலையில் 'சிபர்' வழக்கில் இம்ரான்கான் மற்றும் அவரது நெருங்கிய உதவியாளரும், முன்னாள் வெளியுறவு அமைச்சருமான ஷா மஹ்மூத் குரேஷி ஆகியோர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. இதையொட்டி இம்ரான்கான், குரேஷி ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நீதிபதி வாசித்தார். எனினும் இருவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தனர்.

# பிரதிநிதிகள் சபை வாக்கெடுப்பு வெற்றி

## பைடனுக்கு எதிராக விசாரணை தொடக்கம்



**அமெரிக்கா : டிச. 15,**

**அமெரிக்காவில் அடுத்த வருடம் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது.**

தற்போது அதிபராக உள்ள ஜனநாயக கட்சியை சேர்ந்த ஜோ பைடன் மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிட உள்ளார். அவரை எதிர்த்து குடியரசு கட்சி வேட்பாளரும் முன்னாள் அதிபருமான டொனால்ட் டிரம்ப் தீவிரமாக களம் இறங்கி உள்ளார். இரு தரப்பிலும் பரஸ்பரம் பல விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் மாறி மாறி வைக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் அமெரிக்க அதிபர் பைடனின் மகன் ஹன்டர் பைடன் மீது சுமார் ரூ.11 கோடி தொகை வரி ஏய்ப்பு செய்ததாக குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், ஜோ பைடன் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகளை முன் வைத்து அது குறித்து அமெரிக்க அதிபரிடம் பாராளுமன்ற விசாரணையை தொடங்க பாராளுமன்ற கீழ் சபையான பிரதிநிதிகள் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அந்த வாக்கெடுப்பில் பைடன் மீதான புகார் குறித்து விசாரணை தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் ஆட்சியின் போது துணை அதிபராக இருந்த பைடன் தனது பதவியை தவறாக பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் லாபமடைந்ததாகவும், அக்காலகட்டத்தில் உக்ரைன் மற்றும் சீனாவில் வர்த்தக தொடர்புகளை வைத்திருந்த ஹன்டர் பைடன் தந்தையின் பதவியை ஆதாயம் பெறும் நோக்கில் பயன்படுத்தியதாகவும், அதை பைடன் தடுக்க தவறியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஆனால், இந்த குற்றச்சாட்டுக்களை அதிபர் பைடன் மறுத்துள்ளார்.

பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களில் 3 கமிட்டி உருவாக்கப்பட்டு இது குறித்து முன்னரே விசாரணை நடத்த தொடங்கியிருந்தாலும், தற்போதைய வாக்கெடுப்பு வெற்றியினால் அதிகாரபூர்வ விசாரணை நடைபெற வெள்ளை மாளிகை ஒத்துழைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. விசாரணையை முன்னெடுத்துள்ள குடியரசு கட்சி பிரதிநிதிகள் கேட்கும் ஆவணங்களையும், தரவுகளையும் அது தந்தாக வேண்டும்.

விசாரணைக்கு பிறகு அடுத்த கட்டமாக பாராளுமன்ற மேல் சபையான செனட் சபை உறுப்பினர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்படும். இதிலும் பைடனுக்கு எதிராக வாக்களிக்கப்பட்டால் அவர் பதவி விலக வேண்டும். அதிபர் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் இந்த விசாரணையின் நிகழ்வுகளை அரசியல் விமர்சகர்கள் கூர்ந்து கவனிக்கின்றனர்.

# வியட்நாம் பிரதமருடன் சீன அதிபர் ஜின்பிங் சந்திப்பு



**ஹனோய் : டிச. 15,**

**வியட்நாம் நாட்டின் கம்யூனிஸ்டு கட்சி பொது செயலாளர் குயென் பூ திரோங்கையும் ஜின்பிங் சந்தித்து பேசினார்.**

சீன அதிபர் ஜின்பிங் அரசுமுறை பயணமாக வியட்நாம் சென்றுள்ளார். சீனாவை எதிர்க்கும் விதமாக தைவான், வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுக்கு மேற்கத்திய நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன. இத்தகைய சூழலில் ஜி ஜின்பிங்கின் வியட்நாம் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

2 நாள் பயணமாக தன் மனைவியுடன் தனி விமானத்தில் வியட்நாம் சென்ற சீன அதிபர் ஜின்பிங்க்கு அரசு மரியாதை வழங்கப்பட்டது. தொடர்ந்து வியட்நாம் பிரதமர் பாம் மின் சின்- சீன அதிபர் ஜின்பிங் இடையேயான சந்திப்பு நடைபெற்றது. இருநாட்டு உறவுகள், பொருளாதாரம் மற்றும் ராணுவ மேம்பாடு குறித்து இந்த பேச்சுவார்த்தையில் ஆலோசனை நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. முன்னதாக வியட்நாம் நாட்டின் கம்யூனிஸ்டு கட்சி பொது செயலாளரும் மூத்த அரசியல்வாதியுமான குயென் பூ திரோங்கையும் ஜின்பிங் சந்தித்து பேசியிருந்தார்.



## பாதுகாப்பு அத்துமீறல் தொடர்பாக உள்துறை அமைச்சர் இரு அவைகளிலும் விளக்கம் தர வேண்டும்

## ரயில் விபத்தை தடுத்த மானாமதுரை ஊழியருக்கு தேசிய விருது அறிவிப்பு





## அமைச்சர் உதயநிதியை கண்டு பாஜக அஞ்சுகிறது : புதுக்கோட்டையில் அமைச்சர் ரகுபதி

சென்னை / புதுக்கோட்டை | 15.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
# வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**இரங்கநாதானந்தர்** , இந்திய மதகுரு (பி.1908) (இ.2005)



**கா. ஸ்ரீ. ஸ்ரீ** , தமிழக எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் (பி.1913)



**டி. என். சேஷன்** , முன்னாள் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் (பி.1932) (இ.2019)



**சோ. ந. கந்தசாமி** , தமிழகத் தமிழறிஞர் (பி.1936)



## இன்றைய நினைவு நாள்

**வல்லபாய் பட்டேல்** , இந்திய அரசியல்வாதி (பி.1875) (இ.1950)



**பொட்டி சிறீராமுலு** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1901) (இ.1952)



**ப. ராமமூர்த்தி** , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1908) (இ.1987)

